அட்டை உறுப்பினரின் உடன்படிக்கை

**முக்கியம்:** நீங்கள் கையொப்பமிடுமுன்னர் அல்லது நேஷன்ஸ் ட்ரஸ்ட் பேங்க் பிஎல்சீ யிடமிருந்து இத்துடன் வரும் அட்டையைப் பயன்படுத்துமுன்னர் அட்டை உறுப்பினரின் உடன்படிக்கையைக் கவனமாக வாசிக்கவும். அட்டையை ஏற்றுக்கொள்வதன்மூலம் அத்துடன்/அல்லது கையொப்பமிடுவதன்மூலம் அத்துடன்/அல்லது பாவிப்பதன்மூலம் நீங்கள் கீழே தரப்பட்டுள்ள நியதி நிபந்தனைகளை ஏற்றுக்கொள்கின்றீர்கள் அத்துடன் அவற்றால் பிணிக்கவும்படுகின்றீர்கள்.

1. **வரைவிலக்கணம்**

அ) விண்ணப்பகாரர் என்பது அட்டை விண்ணப்பப்படிவத்தில் கையொப்பமிட்டுள்ள எவரேனும் ஆள் எனப் பொருள்படும்.

ஆ) வங்கி என்பது நேஷன்ஸ் ட்ரஸ்ட் பேங்க் பிஎல்சீ எனவும் அதன் பின்னுறுபவர்கள், சாட்டுதல்காரர்கள் எனவும் பொருள்படும்.

இ) அடிப்படை அட்டை உறுப்பினர் என்பது எந்த அட்டை உறுப்பினரின் பெயரில் வங்கி அட்டைக் கணக்கொன்றை ஆரம்பித்துள்ளதோ அல்லது ஆரம்பிக்கத் தீர்மானித்துள்ளதோ அந்த அட்டை உறுப்பினர் எனப் பொருள்படும்.

ஈ) அட்டை என்பது வங்கியால் வழங்கப்படும் அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் கோல்ட், கிறீன், புளு அல்லது வேறு ஏதேனும் அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் வணிகப் பெயர்கொண்ட அறவீடு அல்லது அட்டை எனப் பொருள்படும்.

உ) அட்டைக் கணக்கு என்பது இந்த உடன்படிக்கையின்கீழ் அடிப்படை அட்டை உறுப்பினராலும் குறைநிரப்பு அட்டை உறுப்பினராலும், அவ்வாறு எவருமிருப்பின், பெறப்பட்ட அல்லது உறப்பட்ட எல்லா வரவுகளையும் பற்றுக்களையும் பதிவுசெய்யும் நோக்கத்திற்காக வங்கியால் ஆரம்பிக்கப்பட்ட அட்டைக் கணக்கு எனப் பொருள்படும்.

ஊ) பண முற்பணம் என்பது அட்டையை, அட்டை இலக்கத்தை அல்லது PIN இலக்கத்தைப் பயன்படுத்தி பணம் பெறும் செயற்பாடு எனப் பொருள்படும்.

எ) பண முற்பண வரையறை என்பது பண முற்பணங்களுக்கு வங்கியால் அனுமதிக்கப்பட்ட உச்ச வரையறை எனப் பொருள்படும்.

ஏ) அட்டை உறுப்பினர் என்பது எந்த விண்ணப்பகாரருக்கு வங்கியால் அட்டை வழங்கப்படுகின்றதோ அந்த விண்ணப்பகாரர் எனப் பொருள்படும்.

ஐ) அறவீடு அல்லது கொடுக்கல்வாங்கல் என்பது இந்த உடன்படிக்கையின்கீழ் அட்டை உறுப்பினர் வங்கிக்குச் செலுத்துவதற்கு உடன்படுகின்ற/உடன்பட்டுள்ள அல்லது பொறுப்புடையவராயிருக்க உடன்படுகின்ற/உடன்பட்டுள்ள அறவீடு செய்யப்பட்டவையும் ஏற்புடைத்தானவையுமான கட்டணங்கள் மற்றும் வேறு எல்லாத் தொகைகளும் உட்பட

அட்டையுடன் மேற்கொள்ளப்படும் ஏதேனும் கொடுக்கல் வாங்கல் அல்லது அறவீடு எனப் பொருள்படும்.

ஒ) கடன் வரையறை என்பது கடன் கணக்கில் வங்கியால் அனுமதிக்கப்பட்ட நிலுவையிலுள்ள அதிகபட்ச பற்றுமீதி எனப் பொருள்படும்.

ஓ) நடைமுறை மீதி என்பது குறிப்பிட்டவொரு திகதியன்று அட்டைக் கணக்கில் நிலுவையிலிருக்கும் மொத்தத் தொகை எனப் பொருள்படும்.

ஔ) வருமதியான குறைந்தபட்ச கொடுப்பனவு என்பது கொடுப்பனவு வருமதியாகும் திகதியளவில் செலுத்தப்படவேண்டிய குறைந்தபட்ச தொகையாக கூற்றில் குறித்துரைக்கப்பட்ட தொகை எனப் பொருள்படும்.

க) வெளிநாட்டுக் கொடுக்கல்வாங்கல்கள் என்பது வெளிநாடுகளில் மேற்கொள்ளப்படும் கொடுக்கல்வாங்கல் எனப் பொருள்படும்.

ங) காலங்கடந்த வருமதி என்பது முந்திய கூற்றில்/(கூற்றுக்களில்) இருந்து நிலுவையிலிருக்கும் வருமதியான (எதுவுமிருப்பின்) திரண்ட குறைந்தபட்ச கொடுப்பனவு எனப்பொருள்படும். காலங்கடந்த வருமதி எதுவும் கூற்றில் புறம்பாகக் காட்டப்படுவதுடன் உடனடியாக செலுத்தப்படவேண்டியதுமாகும்.

ச) கொடுப்பனவு வருமதியான திகதி என்பது நிலுவையிலுள்ள மொத்தம் அல்லது அதன் ஏதேனும் பாகம் வருமதியான குறைந்தபட்சக் கொடுப்பனவு செலுத்தப்படவேண்டிய திகதியாக கூற்றில் குறித்துரைக்கப்பட்ட திகதி என்று பொருள்படும்.

ஞ) PIN என்பது தன்னியக்க பணக் கொடுக்கல் வாங்கல் பொறியின் ஊடாக (ATM) அட்டையுடன் பயன்படுத்துவதற்கு வங்கியால் வழங்கப்பட்ட அல்லது அட்டை உறுப்பினரால் தெரிவுசெய்யப்பட்ட ஆளுக்குரிய இனம்காணும் இலக்கம் என்று பொருள்படும்.

ட) பதிவுத் திகதி என்பது கொடுக்கல்வாங்கலொன்று முறைவழிப்படுத்தப்பட்டு அட்டை உறுப்பினரின் கணக்கிற்கு மாற்றப்படும் திகதி எனப் பொருள்படும்.

ண) சேவை நிறுவனங்கள் என்பது பண்டங்களினதும் சேவைகளினதும் கொள்வனவுக்கு கொடுப்பனவு சாதனமொன்றாக அட்டையை ஏற்று அங்கீகரிக்கும் அல்லது அட்டையை ஏற்றுக்கொள்ள விரும்புவனவும் எங்கேயாவது அமைந்துள்ளவையுமான நிறுவனங்கள் எனப் பொருள்படும்.

த) கூற்று என்பது அதன் திகதியன்று அட்டைக் கணக்கு தொடர்பில் வங்கியின் மட்டில் அடிப்படை அட்டை உறுப்பினரினதும் எவரேனும் குறைநிரப்பு அட்டை உறுப்பினரினதும்(உறுப்பினர்களினதும்) நிதிசார்ந்த பொறுப்புக்களைக் காட்டி வங்கியால் அட்டை உறுப்பினருக்கு அனுப்பப்படும் மாதாந்த கணக்குக் கூற்று எனப் பொருள்படும்.

ப) குறைநிரப்பு அட்டை உறுப்பினர் என்பது அடிப்படை அட்டை உறுப்பினரைத் தவிர வேறு எந்தத் தனியாளுக்கு அட்டை உறுப்பினரின் வேண்டுகோளின்பேரில் அட்டையொன்று

வழங்கப்பட்டு அவரின் அறவீடுகள் அடிப்படை அட்டை உறுப்பினரின் அட்டைக் கணக்கிற்கு அறவிடப்படக்கூடியதாக இருக்குமோ அந்தத் தனியாள் ஒருவர் எனப் பொருள்படும்.

ம) T-PIN என்பது தொலைபேசி ஊடாக வங்கியுடன் இனம்காணும் நோக்கத்திற்கு வங்கியால் வழங்கப்பட்ட அல்லது அட்டை உறுப்பினரால் தெரிவுசெய்யப்பட்ட தொலைபேசியில் இனம்காணும் ஆளுக்குரிய இலக்கம் எனப் பொருள்படும். இந்த வசதி வங்கியின் தற்றுணிபின்பேரில் கிடைக்கச் செய்யப்படும்.

ய) சேவை வழங்கும் மூன்றாம் திறத்தவர் என்பது அட்டையின் ஊடாக நீடிக்கப்பட்ட நலன்களை அத்துடன்/அல்லது சேவைகளை வழங்குவதற்கு

டி) எந்த மூன்றாம் திறத்தவருடன் வங்கி ஒருங்கிணைந்து செயற்படுகின்றதோ அந்தத் திறத்தவர் எனப் பொருள்படும்.

ர) வருமதியான குறைந்தபட்ச மொத்தக் கொடுப்பனவு என்பது வருமதியானதும் காலங்கடந்த வருமதியுமான குறைந்தபட்ச கொடுப்பனவின் மொத்தம் எனப் பொருள்படும்.

ல) மொத்த நிலுவை என்பது வங்கியின் பதிவேடுகளுக்கிணங்க கூற்று வழங்கப்படும் திகதியன்று அட்டைக் கணக்கின்மீது வங்கிக்குச் செலுத்தப்படவேண்டியதாக நிலுவையிலுள்ள மொத்த பற்றுமீதி எனப் பொருள்படும்.

வ) கொடுக்கல்வாங்கல் திகதி என்பது அட்டை உறுப்பினருக்கும் சேவை நிறுவனம் ஒன்றுக்குமிடையே கொடுக்கல்வாங்கலொன்று இடம்பெறும் திகதி எனப் பொருள்படும்.

**2. நியதி நிபந்தனைகளின் ஏற்புடைத்தான தன்மையும் நியதிச்சட்ட ரீதியில் இசைந்தொழுகுதலும்**

2.1 அட்டை அல்லது அட்டைக் கணக்கு தொடர்பில் வங்கியால் எவரேனும் ஆளுக்குக் கிடைக்கச் செய்யப்படும் அனைத்து வசதிகளும் இந்த உடன்படிக்கையில் விதித்துரைக்கப்படும் நியதி நிபந்தனைகளுக்கும் காலத்துக்குக்காலம் வலுவிலிருக்கும் வேறு ஏதேனும் நிகழ்ச்சித்திட்டத்தில் அடங்கியிருக்கும் நிபந்தனைகளுக்கும் நியதிகளுக்கும் அமைந்தனவாகும். அட்டை உறுப்பினர் அட்டைக்கான விண்ணப்பப்படிவத்தின்மீது அவரது கையொப்பத்தின்மூலமும் அத்துடன்/அல்லது அட்டையின்மீது அவரது கையொப்பத்தின்மூலமும் அல்லது அட்டையைப் பயன்படுத்துவதன் மூலமும் இவற்றை ஏற்றுக்கொள்வதற்கு முடிபான சான்றாகும்.

2.2 அட்டையின் பாவனை கண்டிப்பாக ஏற்புடைத்தான சட்டங்களுக்கும் இலங்கையின் இயைபான செலாவணி கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகளுக்கும் ஏற்புடைத்தானவையும் காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டவாறானவையுமான எவையேனும் கொள்கைகளுக்கும் ஒழுங்குவிதிகளுக்கும் இணங்கிய வையாக இருத்தல் வேண்டும்.

2.3 அட்டை உறுப்பினர்(கள்) பண்டங்களை வர்த்தக ரீதியிலான தொகைளில் இறக்குமதி செய்வதற்கு அல்லது மூலதனக் கொடுக்கல்வாங்கல்களுக்குக் அட்டையை(அட்டைகளை) பயன்படுத்துதலாகாது.

2.4 அட்டையை இலத்திரனியல் நிதிக் கைமாற்றத்திற்கு (EFT) அல்லது வெளிநாட்டு நாணயமொன்றில் ATM பொறியில் பணத்தை மீளப் பெறுவதற்கு அட்டை பயன்படுத்தப்படும்பட்சத்தில் அது செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தால் காலத்துக்குக்காலம் வழுங்கப்படும் ஒழுங்குவிதிகளுக்கு அமைவாயிருத்தல் வேண்டும் என்பதுடன் அதிகாரமளிக்கப்பட்ட நோக்கங்களுக்கு மாத்திரமாகவே இருத்தலும் வேண்டும்.

2.5 வங்கி செலாவணி கட்டுப்பாட்டதிகாரியின் அல்லது காலத்துக்குக்காலம் விதித்துரைக்கப்பட்டவாறு வேறு ஏதேனும் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபையினதும் தேவைப்பாடுகளுடன் இசைந்தொழுகும் என்பதுடன் நடைமுறையிலுள்ள இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் விதிகள், ஒழுங்குவிதிகள் என்பவற்றின்கீழ் இயைபான அதிகாரிகளுக்கு அத்தகைய கொடுக்கல்வாங்கல்களையும் வெளிவிடும்.

2.6 செலாவணிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகளின் அல்லது இல்லாதொழிக்கும் நேரத்தில் வலுவிலுள்ள வேறு எவையேனும் நியதிச்சட்ட ஒழுங்குவிதிகளின் மீறுகையொன்று இருந்துள்ளது என நம்புவதற்கு வங்கிக்கு எத்தன்மையதுமான காரணம் எதுவும் இருக்கும்பட்சத்தில், வங்கி அதன் சொந்த விருப்பத்தின்படி அட்டை உறுப்பினருக்கு அறிவித்தல் எதுவுமின்றி அட்டை(யை)(களை) இல்லாதொழிக்கலாம்.

**3. அட்டை சேவைகள்**

அட்டை கைமாறத்தகாதது என்பதுடன் பாவனை இந்த உடன்படிக்கையின் நியதி நிபந்தனைகளுக்கும் காலத்துக்குக்காலம் விதித்துரைக்கப்படக்கூடியவாறான எவையேனும் மேலதிக நிபந்தனைகளுக்கும் அமைந்ததாகும். அட்டை உறுப்பினர் அட்டை கிடைக்கப்பெற்றதும் உடனடியாக அட்டையின் மறுபுறத்தில் கையொப்பமிடுதல் வேண்டும். அட்டையிலுள்ள கையொப்பம் விண்ணப்பப் படிவத்திலுள்ள கையொப்பத்தைப்போலவே இருத்தல் வேண்டும்.

**4. அட்டையை ஒப்படைத்தல்**

அட்டை ஒப்படைத் தூதரால் ஒப்படைக்கப்படும் (Courier) அல்லது பதிவஞ்சலில் அனுப்பப்படும் அல்லது அட்டை உறுப்பினரால், குறைநிரப்பு அட்டை உறுப்பினரால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட மூன்றாம் திறத்தவர் ஒருவரால் கையேற்கப்படும். அடிப்படை அட்டை உறுப்பினர் அல்லது எவரேனும் குறைநிரப்பு அட்டை உறுப்பினர் அட்டையைப் பெற்றுக்கொண்டதும் அவர் அவரது ஆளடையாளத்திற்கான எண்பிப்பை முன்வைத்தலும் உடனடியாக வழங்கப்பட்ட ஒப்புறுதிச்சிட்டையில் முறையாகக் கையொப்பமிட்டு அட்டை கிடைக்கப்பெற்றமையை ஒப்புறுதி செய்தலும் வேண்டும். அட்டை உறுப்பினர் தமது சார்பில் அட்டையை பெற்றுக்கொள்வதற்கு அல்லது எடுத்துவருவதற்கு அவரது தற்றுணிபின்படி மூன்றாம் திறத்தவர் ஒருவருக்கு எழுத்தில் அதிகாரமளிக்கலாம் என்பதுடன் அட்டை உறுப்பினரால் அவர் சார்பில் அதிகாரமளிக்கப்பட்ட ஆளினால் அட்டை ஏற்றுக்கொள்ளப்படும் நேரத்திலிருந்து அட்டையின்மீது உறப்பட்ட எல்லா அறவீடுகளுக்கும் பொறுப்பாதலும் வேண்டும். வங்கி அதன் தற்றுணிபின்படி வங்கியால் தீர்மானிக்கப்பட்ட மூன்றாம் திறத்தவரொருவருக்கு அல்லது அட்டை உறுப்பினரின் பிரதிநிதியாக இருப்பதற்கென வங்கியால் தீர்மானிக்கப்பட்ட அதன் பிரதிநிதிக்குக்

கையளிக்கலாம். அட்டை அவ்வாறு ஒப்படைக்கப்பட்ட நேரத்திலிருந்து அட்டையின்மீதான அறவீடுகளுக்கு அட்டை உறுப்பினர் பொறுப்பாதல் வேண்டும்.

## 5. அட்டையின் பயன்பாடு

5.1 அட்டை உலகம் முழுவதும் செல்லுபடியாகும். ஆயினும் எத்தன்மையதுமான ஏதேனும் காரணத்திற்காக சேவை நிறுவனமொன்றில் ஏதேனும் நேரத்தில் அட்டையின் பாவனையை மறுப்பதற்கான உரிமை வங்கிக்கும் சம்பந்தப்பட்ட சேவை நிறுவனத்திற்குமுண்டு. அட்டை நல்லெண்ணத்துடனான தனிப்பட்ட அல்லது அலுவலக நோக்கங்களுக்காக மட்டுமே பயன்படுத்தப்படலாம் என்பதுடன் அதன் பயன்பாடு அட்டை உறுப்பினரின் தொழிலில் வர்த்தக ரீதியில் தன்னலன்களுக்குப் பயன்படுத்த அனுமதிக்கப்படமாட்டாது. சில சேவை நிறுவனங்களின் விடயத்தில் உறப்படும் அறவீடுகள் கொள்வனவை அல்லது சேவையைப் பெறுவதற்கான அறவீடொன்றையும் உள்ளடக்கலாம்.

5.2 அட்டை உறுப்பினர் எல்லா நேரங்களிலும் அவர் PIN மற்றும் T-PIN இலக்கங்களை அந்தரங்கமாகவும் அட்டையிலிருந்து புறம்பாகவும் வைத்திருத்தல் வேண்டும். அத்துடன் அட்டை பாதுகாப்பான ஓர் இடத்தில் வைக்கப்படுவதையும் வேறு எவரேனும் ஆட்களினால் பயன்படுத்தப்படா

5.3 திருப்பதனையும் உறுதிப்படுத்துதல் வேண்டும். அட்டை உறுப்பினருக்குத் தெரிந்தோ தெரியாமலோ PIN மற்றும் T-PIN சகிதம் மேற்கொள்ளப்படும் எல்லாக் கொடுக்கல் வாங்கல்களுக்கும் அட்டை உறுப்பினரே பொறுப்புடையவராதல் வேண்டும்.

5.4 சேவை நிறுவனமொன்றில் அட்டை பாவிக்கப்படுவதன்மீது அட்டை உறுப்பினர் அறவீட்டுச் சிட்டையில் கையொப்பமிடும் நேரத்தில் அறவீட்டுச் சிட்டையின் பிரதியொன்றைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். வழமையாக ஏனைய அறவீட்டுச் சிட்டைகளின் பிரதிகளை வங்கி அட்டை உறுப்பினருக்கு வழங்குவதில்லை. ஆயினும் வங்கியின் ஏக தற்றுணிபின்பேரில் வங்கியால் தீர்மானிக்கப்படும் மேலதிகக் கட்டணமொன்றின் கொடுப்பனவின்மீது பிரதிகள் வழங்கப்படலாம்.

5.5 வங்கி தெரிவு அடிப்படையில் அட்டை உறுப்பினருக்கு இணையத்தளத்தின் ஊடாக அஞ்சல் தேவைக் கட்டளைகள் ஊடாக அல்லது தொலைபேசி தேவைக் கட்டளைகள் ஊடாக கொள்வனவுகளை அல்லது கொடுக்கல்வாங்கல்களைப் பயனுறுத்தும் வசதியை தமக்கு வழங்க உடன்படலாம் என்பதற்கு அட்டை உறுப்பினர் உடன்படுகின்றார். அத்தகைய விடயங்களில் அட்டையைப் பயன்படுத்தும் நேரத்தில் அறவீட்டுச் சிட்டை அட்டை உறுப்பினரால் கையொப்பமிடப்படமாட்டாது. அதற்கிணங்க எத்தன்மையதுமான ஏதேனும் காரணத்திற்காக அத்தகைய கொள்வனவொன்றின் அல்லது அறவீடொன்றின் சான்றுறுதி அல்லது செல்லுபடியாகும் தன்மை தொடர்பில் ஏதேனும் பிணக்கு ஏற்படும் பட்சத்திலும்கூட அட்டை உறுப்பினர் நிலுவைகளை செலுத்தித்தீர்ப்பார் என்பதனை அட்டை உறுப்பினர் ஏற்றுக்கொள்கின்றார். ஏதேனும் அத்தகைய பிணக்கு அட்டை உறுப்பினருக்கும் சேவை நிறுவனத்திற்கும் இடையிலான ஒரு விடயமாகும் என்பதுடன் அவற்றிற்கிடையே தீர்த்துக்கொள்ளவும்படும். இதற்கு வங்கி எதுவிதத்திலும் பொறுப்புடை யதாக மாட்டாது.

5.6 அட்டை வங்கியால் அட்டை உறுப்பினருக்கு அறிவிக்கப்பட்ட கடன் வரையறைக்குள் அதன் முகப்பில் புடைப்புரு செய்யப்பட்ட கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக மட்டுமே பயன்படுத்தப்படலாம்.

5.7 வங்கியின் ஏக தற்றுணிபிற்கமைய அட்டை உறுப்பினரால் வங்கிக்கு எழுத்தில் அறிவிக்கப்படும்வரை அட்டையின் புதுப்பித்தல் அத்துடன்/அல்லது மாற்றீடு அட்டை உறுப்பினர் ஒவ்வொருவருக்கும்

5.8 வழங்கப்படுதல் வேண்டும் எனத் தாம் நிலையியல் வேண்டுகோள் ஒன்றை விடுத்திருப்பதாக அட்டை உறுப்பினர் உடன்படுகின்றார். அட்டை முடிவுறுவுதன்மீது, காணாமற்போவதன்மீது அல்லது களவு போவதன்மீது அட்டை வசதியைப் புதுப்பிப்பதற்கான ஏக உரிமை வங்கிக்குண்டு. அவ்வாறு புதுப்பிக்கப்படாத பட்சத்தில் அட்டை உறுப்பினர் தயக்கமோ தாமதமோ இன்றி வருமதியான மீதியை உடனடியாக வங்கிக்கு செலுத்தித்தீர்த்தல் வேண்டும்.

5.9 அட்டையுடனும் வங்கியுடனுமான எல்லாக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பிலும் எல்லா நேரங்களிலும் நல்லெண்ணத்துடன் செயற்படுவதை அட்டை உறுப்பினர் பொறுப்பேற்கின்றார்.

5.10 எத்தன்மையதுமான காரணம் எதுவும் காட்டாமல் ஏதேனும் நேரத்தில் கடன் வரையறையை இடைநிறுத்துவதற்கு அல்லது குறைப்பதற்கு அல்லது அட்டையின்மீது அதிகாரமளிப்பிற்கான வேண்டுகோளொன்றை மறுப்பதற்கு அல்லது ஏற்றங்கீகரிப்பதற்கான பூரண தற்றுணிபையும் சுதந்திரத்தையும் வங்கி தன்னகத்தே கொண்டுள்ளது. அட்டையின்மீது கடன் வரையறையின் அத்தகைய இடைநிறுத்தத்தின், மறுப்பின் அல்லது குறைப்பின் காரணமாக அட்டை உறுப்பினருக்கு ஏற்பட்ட ஏதேனும் இழப்பில் அல்லது சேதத்திலிருந்தெழும் எவையேனும் விளைவுகளுக்கு வங்கி பொறுப்பாளியாகமாட்டாது.

## 6. மீறுகை

எவரேனும் அட்டை உறுப்பினரால் இந்த உடன்படிக்கையில் மீறுகை எதுவும் புரியப்படும் பட்சத்தில˙-

அ) இந்த உடன்படிக்கையின் வேறு ஏதேனும் ஏற்பாடு எவ்வாறிருப்பினும் அத்தகைய மீறுகையின் விளைவாக நேரடியாகவோ மறைமுகமாகவோ வங்கிக்கு ஏற்படும் ஏதேனும் இழப்பிற்கெதிராக அட்டை உறுப்பினர் வங்கியை நட்டோத்திரவாதம் செய்துவைத்தல் வேண்டும்.

ஆ) அட்டை உறுப்பினரிடமிருந்து வங்கிக்கு வருமதியாகவிருக்கும் எல்லா நிலுவைகளையும் கோரிக்கையின்மீது அத்தகைய கோரிக்கையின் திகதியன்று வருமதியாகவும் செலுத்தப்படவேண்டியுமிருப்பினும்சரி,

அல்லாவிடினும்சரி வங்கிக்குச் செலுத்துவதற்கு அட்டை உறுப்பினர் பொறுப்புடையவராதல் வேண்டும்.

## 7. முடிவுறுத்துதல்

7.1 அட்டை உறுப்பினர் ஏதேனும் நேரத்தில் வங்கிக்கு எழுத்திலான அறிவித்தலை வழங்குவதுடன் அதனோடு சேர்த்து அடிப்படை அட்டையையும் ஏதேனும் குறைநிரப்பு அட்டையையும் திருப்பிக்கொடுப்பதன்மூலம் அட்டை வசதியை முடிவுறுத்தலாம்.

7.2 அத்தகைய அறிவித்தல், காந்தக்கீற்று வெட்டப்பட்டுள்ளது என்பதனை உறுதிப்படுத்தி அட்டை நான்கு துண்டுகளாக வெட்டப்பட்டுள்ளவரை பயனுறமாட்டாது.

7.3 மேலே காட்டப்பட்டவாறு தவிர அட்டை உறுப்பினர் ஏதேனும் அட்டையை அல்லது அட்டைக் கணக்கை முடிவுறுத்துதலாகாது.

7.4 அட்டை உறுப்பினர் அட்டையை அழித்துவிட்டதாக உரிமை கோரிய பின்னர் அட்டையின்மீது அறவீடுகள் உறப்படும் பட்சத்தில் அது துஷ்பிரயோகத்தின் விளைவாக இருப்பினும்சரி அல்லது வங்கிக்கு அறிவிக்கப்பட்டிருப்பினும்சரி அல்லாவிடினும்சரி அத்தகைய அறவீடுகளுக்கு அட்டை உறுப்பினர் முற்றிலும் பொறுப்புடையவராதல் வேண்டும். வங்கி சூழ்நிலைகளைப்பற்றிய அறிவித்தலுடனோ அறிவித்தலின்றியோ வங்கியின் முழுத் தற்றுணிபின்படி அட்டையை முடிவுறுத்தலாம்.

7.5 அட்டை முடிவுறுத்தப்படுவதன்மீது வங்கிக்கும் அட்டை உறுப்பினருக்குமிடையில் முரணாக ஏதேனும் முன்னேற்பாடு எவ்வாறிருப்பினும்:

i அட்டையைப் பயன்படுத்துவதற்கு அட்டை உறுப்பினரின் உரிமை உடனடியாக இல்லாதொழியும்; அத்துடன்

ii அப்போது நிலுவையிலிருக்கும் எல்லா அறவீடுகளினதும் மொத்தமும் அது ஏற்கனவே கூற்றில் பிரதிபலிக்கப்பட்டிருப்பினும்சரி அல்லா விடினும்சரி முடிவுறுத்துதலின் பின்னர் உறப்பட்ட எவையேனும் அறவீடுகளின் தொகையும் (இயைபான கொடுக்கல் வாங்கல் அறிவுறுத்துதலின் திகதியிலிருந்து) அவை அவ்வாறு பிரதிபலிக்கப்பட் டிருந்தாற்போன்று உடனடியாக வருமதியாகவும் அட்டை

உறுப்பினரால் செலுத்தப்படற்பாலதாதலும் வேண்டும் என்பதுடன் ஏற்புடைத்தானவாறு அதன்மீது வட்டியும் திரளும்.

7.6 அட்டைக் கணக்கின் நிலுவையிலுள்ள மீதி முழுவதும் பயனுறுத்தப்பட்டுள்ளதும் இன்னமும் அட்டைக் கணக்கிற்கு அறவீடு செய்யப்படாதிருப்பதுமான நிலுவையிலுள்ள எவையேனும் அட்டைக் கொடுக்கல்வாங்கல்களின் தொகையுடன் சேர்த்து, இவ்வுடன்படிக்கை

முடிவுறுத்தப்படுவதன்மீது அல்லது அட்டை உறுப்பினரின் வங்கி முறிவின்மீது அல்லது இறப்பின்மீது உடனடியாக வங்கிக்கு வருமதியாகவும் முழுமையாக செலுத்தப்படற்பாலதாதலும் ஆகும். அட்டையின் மீதான ஏதேனும் நிலுவையை செலுத்தித்தீர்ப்பதற்கு அட்டை உறுப்பினர் அல்லது அவரது மரணச் சொத்து

பொறுப்புடையதாகும் என்பதுடன் அத்தகைய நிலுவையை மீட்டுப் பெறுவதில் உறப்பட்ட எல்லாச் செலவுகளுக்கும் அறவீடுகளுக்கும் (சட்டக் கட்டணங்கள் உட்பட) செலவுகளுக்கும் எதிராக நட்டோத்தரவாதம் செய்து வைத்தலும் வேண்டும். அத்தகைய மீள் கொடுப்பனவு செலுத்தப்படாதிருக்கையில் வங்கி அதன் நடப்புக்கால வீதத்தின்படி நிதி அறவீடுகளையும் வேறு கட்டணங்களையும் விதிப்பனவுகளையும் தொடர்ந்து அறவிடுவதற்கு உரித்துடையதாகும்.

7.7 இந்த உடன்படிக்கை இரு திறத்தவர்களுள் எவரேனும் ஒரு திறத்தவரால் முடிவுறுத்தப்பட்டமை எவ்வாறிருப்பினும் அட்டையின் பாவனையால் உறப்பட்ட மேலும் எல்லா அறவீடுகளுக்கும் அட்டை உறுப்பினர் தொடர்ந்து பொறுப்புடையவராதல் வேண்டும்.

## 8. அட்டை வெளிநாட்டில் பயன்படுத்தப்படல்

அட்டை சர்வதேச ரீதியில் சேவை நிறுவனங்களில் செல்லுபடியாகும். அதன் பாவனை இலங்கை மத்திய வங்கியின் (இ.ம.வ.) வழிகாட்டு நெறிகளின்படி உரித்துடைமைகளை விஞ்சுமாயின் இ.ம.வ. யின் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுவதன்மூலம் இ.ம.வ. யிடமிருந்து தேவையான அனுமதியைப் பெறுவதற்கு அட்டை உறுப்பினர் பொறுப்பேற்கின்றார். ஆயினும், எந்தவொரு சந்தர்ப்பத்தின்கீழும் மிதமிஞ்சி பணம் பெற்றதன் ஏதுவின்மீது கூற்றின் மீள் கொடுப்பனவு தாமதப்படுத்தப்படுதலோ மறுக்கப்படுதலோ ஆகாது.

## 9. அட்டை உறுப்பினர் வெளிநாடு செல்லல்

நாட்டை விட்டுச் செல்லும் அத்துடன்/அல்லது நிரந்தரத் தொழிலின் பொருட்டு வெளிநாடு நோக்கிப் புறப்பட்டுச் செல்லும் அல்லது அந்நேரத்தில் வலுவிலுள்ள செலாவணி கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகளின் வரைவிலக்கணங்களின்படி ‘‘வதிவற்றவர்’’ எனக் கருதப்படும் அட்டை உறுப்பினர் ஒருவர் வங்கிக்கு எழுத்தில் அறிவித்தல் வேண்டும் என்பதுடன் விலைப்பட்டியலிடப்பட்டதும் விலைப்பட்டிய

லிடப்படாததுமான எல்லா அறவீடுகளையும் செலுத்தித்தீர்த்தலும் வேண்டும்; அத்துடன் அடிப்படை அட்டையையும் ஏதேனும் குறைநிரப்பு அட்டையையும் ஒப்படைத்தலும் வேண்டும்.

## 10. வதிவற்ற இலங்கையர்களுக்கு அட்டை

இ.ம.வ. யால் வழங்கப்பட்ட நடைமுறையிலுள்ள வழிகாட்டுநெறிகளின்படி வதிவற்ற இலங்கையர்கள் அட்டைகளை வைத்திருக்க அனுமதிக்கமாட்டார்கள். அத்தகைய சந்தர்ப்பத்தில் அட்டை உறுப்பினர் அடிப்படை அட்டையையும் ஏதேனும் குறைநிரப்பு அட்டையையும் வங்கிக்கு திருப்பிக்கொடுத்தல் வேண்டும்.

## 11. வெளிநாட்டவர்களுக்கு அட்டைகள்

ஒரு வெளிநாட்டவரான அட்டை உறுப்பினர் இலங்கையில் வதிவாராயின் அவர் அட்டையைப் பயன்படுத்தலாம். அத்தகைய வெளிநாட்டவரான அட்டை உறுப்பினர் நிரந்தரமாகவே நாட்டை விட்டுச்செல்வாராயின் ஒரு மாதத்திற்கு முன்னர் அத்துடன்/அல்லது அவரது வதிவு வீசா

முடிவுறுவதற்கு ஒரு மாதத்திற்கு முன்னர் வங்கிக்கு எழுத்தில் அறிவித்தல் வேண்டும். அவர் மேற்படி நிகழ்வுகளுள் ஏதேனும் ஒன்று சம்பவிப்பதற்கு முன்னர் விலைப்பட்டியலிடப்பட்டதும் விலைப்பட்டியலிடப்படாததுமான அறவீடுகளை முழுமையாகச் செலுத்தி அட்டையை (அட்டைகளை) வங்கிக்கு ஒப்படைத்தல் வேண்டும்.

## 12. வெளிநாட்டு நாணயத்திலான அறவீடுகள்

இலங்கை ரூபாவில் அல்லாத வேறு நாணயங்களில் பயனுறுத்தப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் வங்கியால் தீர்மானிக்கப்படும் செலாவணி வீதமொன்றின்படி இலங்கை ரூபாவாக மாற்றப்பட்டபின்னர் அட்டைக் கணக்கிற் பற்றுவைக்கப்படும்.

12.1 அமெரிக்க டொலர் அல்லாத வேறு வெளிநாட்டு நாணயமொன்றில் செய்யப்படும் அறவீடொன்று அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் நிறுவனத்தால் நாணய மாற்றம் செய்யப்படும்பொழுது அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் நிறுவனத்தால் நாணய மாற்றம் செய்யப்படுவதற்குமுன்னர் அமெரிக்க டொலராக மாற்றப்படும். மாற்றப்பட்ட தொகையுடன் **2.5%** மாற்றற் கணிப்பொன்று மாற்றப்பட்ட தொகையுடன் சேர்க்கப்படும். வங்கி அதனால் பேணப்படும் நடப்புக்கால அமெரிக்க டொலர்/இலங்கை ரூபா செலாவணி

வீதத்தைப் பயன்படுத்தி எல்லா வெளிநாட்டுக் கொடுக்கல் வாங்கல்களையும் விலைப்பட்டியலிடும் நாணயமாக மாற்றும்.

## 13. பண முற்பணங்கள்

13.1 அட்டை உறுப்பினரால் ATM பொறியிலிருந்து அல்லது வங்கிக் கிளைகளிலிருந்து அல்லது பணம் செலவீடு செய்யும் வணிகர்களிடமிருந்து அல்லது முகவர்களிடமிருந்து பெறப்படும் முற்பணங்கள் ATM இன் வங்கியின், வணிகரின் உள்நாட்டின் அல்லது நாட்டின் வரையறைகளுக்கும் மட்டுப்பாடுகளுக்கும் அமைந்தனவாகும். அத்துடன் மத்திய வங்கியினதும் செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தினதும் ஒழுங்குவிதிகளும் ஏற்புடையனவாகும். அட்டை உறுப்பினர் வங்கியால் வழங்கப்பட்ட PIN இலக்கத்தைப் பயன்படுத்தினாலன்றி அவர் ATM பொறிகளிலிருந்து பண முற்பணங்களைப் பெறமுடியாது.

13.2 அட்டை உறுப்பினர்கள் பண முற்பண வரையறைகள்வரை பண முற்பணங்களைப் பெறலாம். தற்காலிக கடன் வரையறையின் அடிப்படையில் பணமாக மாற்றிப்பெறுதல் அத்துடன்/அல்லது அட்டைக் கணக்கிற்குப் பண வைப்பீடுகள் அல்லது நிதி மாற்றங்கள் என்பன எதுவிதத்திலும் பண முற்பணத்தின் வரையறையை அதிகரிக்கமாட்டா.

13.3 இந்த வசதி வங்கியால் அட்டை உறுப்பினருக்கு முன்னறிவித்தலின்றி மாற்றப்படலாம். அல்லது கைவாங்கப்படலாம்.

**14. கடன் வரையறை**

அட்டையுடன் சேர்த்தனுப்பப்படும் கடிதமும் கணக்குக் கூற்றும் அட்டை உறுப்பினரின் கணக்கிற்கு ஏற்புடைத்தான பூர்வாங்க கடன் வரையறையைக் காட்டும். வங்கி காலத்துக்குக்காலம் கடன் வரையறையைத் தீர்மானித்து அதனைப்பற்றி அட்டை உறுப்பினருக்கு அறிவிக்கும். நடப்புக்கால மீதி கடன் வரையறையை விஞ்சினால் அட்டை உறுப்பினர் ஏதேனும் விஞ்சு தொகையை உடனடியாகக் கொடுப்பனவு செய்தல் வேண்டும். கடன் வரையறை விஞ்சப்படுமாயின் கடன் வரையறை எந்தத் தொகையால் விஞ்சுகின்றதோ அந்தத்

தொகையைப் பொருட்படுத்தாமல் காலத்துக்குக்காலம் ஏற்புடைத்தாகக்கூடியவாறு வரையறையை விஞ்சிய அறவீடொன்று அட்டைக் கணக்கிற்கு விதிக்கப்படும்.

**15. அட்டைகள் முடிவுறுதல்**

அட்டை அதன் முகப்பில் அச்சிடப்பட்ட முடிவுறு திகதிவரை செல்லுபடியாகும். அட்டையின் செல்லுபடிக் காலத்தின் புதுப்பித்தல் வாசகம் 5.6 இல் ஏற்பாடு செய்யப்பட்டவாறாக இருக்கும்.

**16. அட்டை வங்கியின் சொத்தாகும்**

அட்டை வங்கியின் சொத்தாகும். அட்டை அடிப்படை உறுப்பினர் அல்லது குறைநிரப்பு அட்டை உறுப்பினர் எவரும் அட்டையைப் பயன்படுத்துவதற்கு கொண்டுள்ள உரிமையை வங்கி ஏதேனும் நேரத்தில் இல்லாதொழிக்கலாம். வங்கி அட்டை உறுப்பினருக்கான அறிவித்தலுடனோ அறிவித்தலின்றியோ அல்லது ஏதேனும் காரணத்துடனோ காரணமின்றியோ இந்த உரிமையைப் பிரயோகிக்கலாம். வங்கி இல்லாதொழிக்கப்பட்ட அட்டைகளை ‘‘இல்லாதொழித்தல் கையேட்டில்’’ நிரற்படுத்தலாம் அல்லது வேறு வகையில் அட்டை இல்லாதொழிக்கப்பட்டுள்ளது அல்லது இரத்துச் செய்யப்பட்டுள்ளது என சேவை நிறுவனங்களுக்கு அறிவிக்கலாம்.

வங்கி அட்டையை இல்லாதொழிக்குமாயின் அட்டை உறுப்பினர் அட்டையை வங்கிக்கு திருப்பிக்கொடுத்தல் வேண்டும். அத்துடன் சேவை நிறுவனமொன்று முடிவுற்ற அல்லது இல்லாதொழிக்கப்பட்ட அட்டையொன்றை ஒப்படைக்குமாறு அட்டை உறுப்பினரைக் கேட்டுக்கொண்டால் அட்டை உறுப்பினர் அவ்வாறு செய்தல் வேண்டும். அட்டை முடிவுற்றதன்பின்னர் அல்லது இல்லாதொழிக்கப்பட்டதன்பின்னர் அட்டை உறுப்பினர் அதனைப் பயன்படுத்துதலாகாது. அட்டை இல்லாதொழிக்கப்பட்டதன்பின்னர் அல்லது

முடிவுற்றதன்பின்னர் உறப்பட்ட எல்லா அறவீடுகளுக்கும் அட்டை உறுப்பினர் தொடர்ந்து பொறுப்புடையவராதல் வேண்டும்.

அட்டையை இல்லாதொழித்தல், மீள் உடைமைகொள்ளுதல் அல்லது திருப்பித்தருமாறு கோருதல் உறுப்பினரின் குணாதிசயத்தின் அல்லது அட்டையின் பயன்பாட்டுப் பெறுமதியின் பிரதிபலிப்பாக அமையமாட்டாது என்பதுடன் அட்டையை திருப்பிக்கொடுக்குமாறு அல்லது ஒப்படைக்குமாறு வேண்டுகோள்

விடுக்கும் எவரேனும் ஆளினால் செய்யப்பட்ட ஏதேனும் கூற்றுக்கு வங்கி பொறுப்பாளியாகமாட்டாது.

மேலும் அட்டையோடிணைந்த சிறப்புரிமைகளும் வசதிகளும் அட்டை உறுப்பினருக்கு அறிவித்தல் எதுவும் கொடுக்காமல் அல்லது காரணம் எதுவும் காட்டாமல் வங்கியின் ஏக தற்றுணிபின்படி வங்கியால் ஏதேனும் நேரத்தில் திருப்பிப் பெறப்படலாம்.

**17. அறவீடுகள்**

17.1 வங்கியின் வேண்டுகோளின்பேரில் அட்டைக்கு அது வழங்கப்படும்போது வங்கியால் விதித்துரைக்கப்பட்ட சேர்வு கட்டணமொன்றையும் அத்துடன் குறைநிரப்பு அட்டை ஒவ்வொன்றுக்கும் அது வழங்கப்படும்பொழுது வங்கியால் விதித்துரைக்கப்பட்ட சேர்வு கட்டணம் ஒன்றையும் வங்கிக்குச் செலுத்துவதற்கு அட்டை உறுப்பினர் உடன்படுகின்றார்.

17.2 அட்டையின் பாவனைக்கு ஆண்டுக் கட்டணங்கள் செலுத்தப்படற் பாலதாகும்; இவை வங்கியால் அட்டை உறுப்பினருக்குத் தெரிவிக்கப்பட்டவாறான அத்தகைய வீதங்களில் முன்கூட்டியே விலைப்பட்டியலிடப்படும்.

17.3 அட்டை வெளிநாட்டு முகவரியொன்றுக்கு ஒப்படைத் தூதரால் ஒப்படைக்கப்படும்போது கையாளும் கட்டணமொன்றை வங்கி அட்டைக் கணக்கில் பற்றுவைக்கும்.

17.4 வரையறை அதிகரிப்புகளுக்கு கையாளும் கட்டணமொன்று அட்டைக் கணக்கில் பற்றுவைக்கப்படும்.

17.5 கணக்குக் கூற்றுகளின் பிரதிகளுக்கு கையாளும் கட்டணமொன்று அட்டைக் கணக்கிற்கு பற்றுவைக்கப்படும்.

17.6 அட்டை உறுப்பினர் கொடுப்பனவு வருமதியாகும் திகதியளவில் மொத்த நிலுவையை செலுத்தித்தீர்க்காவிடில் கணக்குக்கூற்றின் திகதியன்று நிலுவையிலிருக்கும் மீதியின் மொத்தத்துடன் வங்கியால் தீர்மானிக்கப்பட்ட வீதத்தின்படி விலைப்பட்டியலிடும் காலப்பகுதிக்கு தினசரி மீதியின்மீது கணிப்பிடப்பட்ட நிதி அறவீடொன்று சேர்க்கப்படும். நிதி அறவீடு

அடுத்துறும் கணக்குக் கூற்றின் திகதியன்று அட்டை கணக்கில் பற்று வைக்கப்படும்.

17.7 மேலே 17.6 இல் குறிப்பீடு செய்யப்பட்ட நிதி அறவீட்டின் கொடுப்பனவுக்குப் பங்கமின்றி அட்டை உறுப்பினர் கொடுப்பனவு வருமதியாகும் திகதியளவில் வருமதியான குறைந்தபட்ச கொடுப்பனவை/வருமதியான மொத்தக் குறைந்தபட்ச கொடுப்பனவை செலுத்தத் தவறுவாராயின் தாமதக் கொடுப்பனவுக் கட்டணமொன்று வங்கியால் தீர்மானிக்கப்படவேண்டிய வீதமொன்றின்படி அறவிடப்பட்டு அட்டைக் கணக்கில் பற்றுவைக்கப்படும்.

17.8 அட்டை உறுப்பினரால் அல்லது வேறு எவரேனும் திறத்தவரால் வங்கிக்கு வழங்கப்பட்ட அல்லது சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் காசோலை அல்லது வேறு கொடுப்பனவுக் கட்டளை எத்தன்மையதுமான ஏதேனும் காரணத்திற்காக ஏற்றங்கீகரிக்கப்படாவிடில் வங்கியால் தீர்மானிக்கப்படவுள்ள வீதப்படி வங்கி கையாளும் கட்டணமொன்றை அட்டை உறுப்பினரிடமிருந்து அறவிட்டு அட்டைக்கணக்கில் பற்றுவைக்கும். இந்த அறவீடானது வங்கியால் அறவிடப்படக்கூடிய ஏதேனும் அஞ்சல் கட்டணத்திற்கு மேலதிகமானதாகும்.

17.9 எல்லாப் பண முற்பணங்கள்மீதும் பண முற்பணக் கட்டணமொன்று அத்துடன்/அல்லது கையாளும் கட்டணமொன்று வங்கியால் தீர்மானிக்கப்படவேண்டிய வீதமொன்றில் அறவிடப்பட்டு அட்டைக் கணக்கில் பற்றுவைக்கப்படும். அட்டையின்மீது கொள்வனவு செய்யப்பட்ட பிரயாணிகள் காசோலைகள், கோரிக்கை வரைவுகள், தந்திப் பணமாற்றங்கள் முதலியவற்றைப் போன்ற உடனடியாக காசாக

17.10 மாற்றப்படக்கூடிய ஏதேனும் சாதனமும் பண முற்பணங்களாகக் கருதப்பட்டு மேற்படி அறவீட்டிற்கு அமைந்ததாக்கப்படும்.

17.11 விலைப்பட்டியலிடப்பட்ட காலப்பகுதியின்போது ஏதேனும் கட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட கடன் வரையறை விஞ்சப்படுமாயின் வரம்பு மீறிய வரையறைக் கட்டணமொன்று அறவிடப்பட்டு அட்டைக் கணக்கில் பற்றுவைக்கப்படும். இது விலைப்பட்டியலிடும் காலப்பகுதியொன்றுக்கு ஒரு முறை விதிப்பனவு செய்யப்படும். கடன் வரையறை விஞ்சப்பட்டிருப்பினும்சரி அல்லாவிடினும்சரி கணிப்பீடு செய்யப்படும் நோக்கத்திற்கு எவையேனும் வங்கிக் கட்டணங்களின் தொகையும் கருத்திற்கொள்ளப்படும்.

17.12 இலங்கையிலுள்ள பெற்றோல் நிரப்பு நிலையங்களில் கிடைக்கும் பெற்றோல், டீசல், எரிவாயு மற்றும் ஏனைய வழங்கல்களின் கொள்வனவுகள் கையாளும் கட்டணமொன்றுக்கு அமைந்ததாகும். இது வங்கியால் தீர்மானிக்கப்படவேண்டிய வீதமொன்றில் அட்டைக் கணக்கிற்கு பற்றுவைக்கப்படும்.

17.13 விற்பனை/பண முற்பண வரைவுகளின் புகைப்படப்பிரதிக்கு மீட்டெடுக்கும் கட்டணமொன்று வங்கியால் தீர்மானிக்கப்படவேண்டிய வீதமொன்றில் அட்டைக் கணக்கிற்கு பற்றுவைக்கப்படும்.

17.14 காலத்துக்குக்காலம் ஏற்புடைத்தாக்கக்கூடிய ஏதேனும்/எவையேனும் அறவீடு(கள்) அது/அவை ஏற்புடைத்தாகும்போது அட்டை உறுப்பினரின் அட்டைக் கணக்கிற்கு அறவிடப்படும்.

17.15 நிதி அறவீடுகளினதும் அட்டைக்கும் அதன் பாவனைக்கும் ஏற்புடைத்தான வேறு கட்டணங்களினதும் அறவீடுகளினதும் விவரங்கள் வங்கியால் ஒவ்வோர் ஆண்டும் வெளியிடப்படும் தீர்வைக் கையேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளன. இதன் பிரதிகளை இலங்கையிலுள்ள எவையேனும் வங்கிக் கிளைகளிலும் அட்டை நிலையத்திலிருந்தும் வேண்டுகோளின்மீது பெற்றுக்கொள்ளலாம். எல்லா அறவீடுகளும் கட்டணங்களும் வட்டி வீதங்களும் தண்டப் பணங்களும் வரம்புகளும் வங்கியின் ஏக தற்றுணிபின்படி அறிவித்தலின்றி மாற்றத்திற்கு அமைந்தனவாகும்; தீர்வைக்கான எவையேனும் அத்தகைய மாற்றல்கள்/சேர்த்தல்கள் கூற்றில்

17.16 விளக்கவுரை என்ற வகையில் அல்லது கூற்றுடன் இணைத்து அல்லது இலங்கையில் வெளியிடப்படும் ஒரு அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட செய்தித்தாள்களில் வெளியீட்டின்மூலம் அட்டை உறுப்பினருக்கு அறிவிக்கப்படும்.

17.17 அட்டை உறுப்பினர் ஒருவரின் வேண்டுகோளின்பேரில் மேற்கொள்ளப்பட்ட ஏதேனும் மேலதிக சேவைக்கு கட்டணமொன்றை அறவிடுவதற்கும் அத்தகைய கட்டணத்தை அட்டைக் கணக்கில் பற்றுவைப்பதற்குமான உரிமை வங்கிக்குண்டு.

17.16 வங்கியால் காலத்துக்குக்காலம் வழங்கப்படக்கூடிய எவையேனும் கட்டணக் குறைப்பனவுகள் அல்லது விட்டுவிடுகைகள் வங்கியால் அதன் தற்றுணிபின்பேரில் ஏதேனும் நேரத்தில் திருப்பிப் பெறப்படலாம் அல்லது மட்டுப்படுத்தப்படலாம். வங்கி அதன் சொந்த தற்றுணிபின்பேரில் அட்டையின் வகை மற்றும் சூழ்நிலைகள் என்பவற்றைப் பொறுத்து ஒருசில அறவீடுகளுக்கு விலக்களிக்கலாம்.

18. **விமான நிறுவனங்களுடன் கொடுக்கல் வாங்கல்கள்**

அட்டையொன்றைப் பயன்படுத்தி விமானப் பயணச் சீட்டொன்று ஒதுக்கப்படுமிடத்து அட்டை உறுப்பினர் ஏற்புடைத்தாயின் எவையேனும் மேலதிக அறவீடுகளுக்கமைய பயணச்சீட்டின் கொள்வனவுக்கு கொடுப்பனவு செய்தல் வேண்டும் என்பதுடன் இது கணக்குக் கூற்றில் விலைப்பட்டியலிடப்படும். அதனையடுத்து இல்லாதொழிக்கப்படும் ஏதேனும் பயணச்சீட்டுக்கு, சேவை நிறுவனத்திடமிருந்து அதற்கான வரவு கிடைக்கப்பெறுகின்றவாறும் கிடைக்கப்பெறும்போதும் உரிய தொகை அட்டைக்கணக்கிற்கு வரவு வைக்கப்படும்.

19. **பிணக்குகள்**

கொடுப்பனவுக்கென சேவை நிறுவனமொன்றிடமிருந்து வங்கியால் பெறப்பட்ட ஏதேனும் அறவீடு அல்லது வேறு கொடுப்பனவுத் தேவைப்பட்டியல், அட்டை காணாமற்போய், அல்லது களவுபோய் 27.1ஆம் 27.2ஆம் பிரிவுகளின்படி வங்கிக்கு முறையாக அறிவிக்கப்பட்டுள்ளவிடத்து தவிர, அட்டையைப் பயன்படுத்தி அத்தகைய தேவைப்பட்டியலில் பதிவுசெய்யப்பட்ட அறவீடு விடயத்திற்கேற்ப அறவீட்டில் அல்லது வேறு தேவைப்பட்டியலில் குறிப்பீடு செய்யப்பட்ட தொகையில் அட்டை உறுப்பினரால் சேவை நிறுவனத்தில்

முறையாக உறப்பட்டது என்பதற்கு முடிவான எண்பிப்பாதல் வேண்டும். அட்டை மோசடியாகப் பயன்படுத்தப்பட்டது என்பதனை எண்பிக்கும் பொறுப்பு அட்டை உறுப்பினரைச் சாரும். இந்த வாசகத்தில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏனைய கொடுப்பனவு தேவைப்பட்டியல் நானாவித ஹோட்டல் அறவீடுகள் முதலியன என அறவீடொன்றாகப் பதிவுசெய்யப்படாததும் அட்டையைப் பயன்படுத்தி அட்டை உறுப்பினர் ஒருவரால் சேவை நிறுவனமொன்றில் உறப்பட்ட அனுமதிக்கப்படக்கூடிய செலவுகள் சார்ந்த எவையேனும் மற்றும் எல்லாக் கொடுப்பனவுகளையும் உள்ளடக்கும். அத்தகைய அறவீட்டுச் சிட்டையில் அட்டை உறுப்பினரின் கையொப்பமும் அதன்மீது குறிப்பிடப்பட்ட அட்டை இலக்கமும் அட்டை உறுப்பினரால் உறப்பட்ட பொறுப்பின் அளவு தொடர்பில் வங்கிக்கும் அட்டை உறுப்பினருக்குமிடையில் முடிவான எண்பிப்பாதல் வேண்டும் என்பதுடன் அட்டை உறுப்பினர் கொள்வனவு செய்யப்பட்ட/கொள்வனவு செய்யப்படவுள்ள பண்டங்களை முறையாகப் பெற்றுக்கொண்டுள்ளார் அல்லது அளிக்கப்பட்ட/

அளிக்கப்படவுள்ள சேவையை முறையாகப் பெற்றுக்கொண்டுள்ளார் என்பதனை உறுதிப்படுத்துமாறு வங்கி உறுதிப்படுத்தப்படமாட்டாது. கூற்றில் குறிப்பிடப்பட்ட அறவீட்டுடன் அட்டை உறுப்பினர் உடன்படாவிடில் அதனைப்பற்றி கூற்று கிடைக்கப்பெற்ற 20 நாட்களுக்குள் வங்கிக்குக் கிடைக்கக்கூடியதாக அறிவிக்கப்படுதல் வேண்டும். அவ்வாறு செய்யத் தவறின் எல்லா அறவீடுகளும் கூற்றுக்களும் முற்றிலும் சரியானதெனப் பொருள்கொள்ளப்படும்.

செய்யப்பட்ட/செய்யப்படவுள்ள அறவீடு, அளிக்கப்பட்ட/அளிக்கப்படவுள்ள சேவை தொடர்பில் அட்டை உறுப்பினரின் கணக்கிற்கு அறவீடு செய்வதற்கான அதிகாரம் ஒன்றில் சேவை நிறுவனத்தால் பயன்படுத்தப்பட்டவாறும் வங்கியால் வழங்கப்பட்டவாறும் ஓர் அறவீட்டுச் சிட்டையின் வடிவில் அன்றேல் வங்கியால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு வடிவில் அட்டை உறுப்பினரால் வழங்கப்படும். கூற்றில் காட்டப்படும் ஏற்புடைத்தான அறவீட்டுடன் இடருற்ற அட்டை உறுப்பினரின் உடன்பாட்டின்மையைத் தீர்ப்பதற்கு அத்தகைய உடன்பாட்டின்மை பற்றிய அறிவித்தல் கிடைக்கப்பெற்றதும் வங்கி நல்லெண்ணத்துடனானதும் வர்த்தக ரீதியில் நியாயமானதுமான முயற்சியை மேற்கொள்ளுதல் வேண்டும். அத்தகைய முயற்சியின் பின்னர் கூற்றில் காட்டப்பட்ட அறவீடு சரியானதென வங்கி தீர்மானித்தால் வங்கி அதனைப்பற்றி அறவீட்டுச் சிட்டையின் அல்லது கொடுப்பனவு தேவைப்பட்டியலின் பிரதியொன்று உட்பட விவரங்களுடன் சேர்த்து அட்டை உறுப்பினருக்கு அறிவித்தல் வேண்டும். அதன்பின்னர் அட்டை உறுப்பினர் வட்டியும் ஏற்புடைத்தான வேறு எவையேனும் அறவீடுகளும் உட்பட தாமதமின்றி கொடுப்பனவைச் செய்தல் வேண்டும்.

பிணக்கிற்குட்பட்ட கொடுக்கல் வாங்கல்களின் காரணமாக மீளளிப்புகள் அல்லது செயல்மாற்றங்கள் உட்பட இல்லாதொழித்தலின், செயல்மாற்றத்தின் அல்லது மீளளிப்பின் விளைவாக ஏற்படக்கூடிய ஏதேனும் செலாவணி இழப்பிற்கு அட்டை உறுப்பினர் பொறுப்புடையவராவார்.

20. **அட்டையை ஏற்றங்கீகரிக்க மறுத்தல்**

அட்டை ஏதேனும் குறிப்பிட்டவொரு சேவை நிறுவனத்தால் ஏற்றங்கீகரிக்கப்படும் என வங்கி உத்தரவாதம் எதுவும் வழங்கமாட்டாது, அட்டை ஏதேனும் சேவை நிறுவனத்தால் ஏற்றங்கீகரிக்க மறுக்கப்பட்டமைக்கு பொறுப்பெதனையும் ஏற்கவும் மாட்டாது.

21. **பெயர் மற்றும் முகவரி மாற்றம்**

பெயரில் அல்லது முகவரியில் ஏதேனும் மாற்றம் பற்றி அட்டை உறுப்பினர் வங்கியின் அட்டை நிலையத்திற்கு எழுத்தில் அறிவித்தல் வேண்டும்.

22. **பண்டங்களினதும் சேவைகளினதும் தரம்**

அட்டை உறுப்பினரால் விடுவிக்கப்பட்ட அஞ்சல் தேவைக் கட்டளையிலிருந்து பண்டங்கள் ஒப்படைக்கப்படுவதிலான தாமதம், ஒப்படைக்கப்படாமை அத்துடன் கிடைக்கப்பெறாமை அல்லது குறைபாடுடைய பண்டங்கள் கிடைக்கப்பெற்றமையின் ஏதுக்கள் உட்பட சேவை நிறுவனத்திடமிருந்து அட்டை உறுப்பினரால் கொள்வனவு செய்யப்பட்ட அல்லது பெறப்பட்ட வியாபாரப் பண்டங்களுக்கு, நியதி உத்தரவாதத்திற்கு, சேவைகளுக்கு வங்கி எதுவிதத்திலும் பொறுப்புடையதாகமாட்டாது. அட்டை வசதி முற்றிலும் பண்டங்களைக் கொள்வனவு செய்வதற்கு அல்லது சேவைகளைப் பெறுவதற்கு அட்டை உறுப்பினருக்கு அளிக்கப்படும் ஒரு வசதி மட்டுமேயொழிய பண்டங்கள் அல்லது சேவைகள் தொடர்பில் தரம், தொகை, ஒப்படைப்பு அல்லது வேறு வகையில் எத்தன்மையிலாயினும் வங்கி நியதி உத்தரவாதம் எதனையும் கொண்டிருக்கவோ அல்லது வாதவுரை எதனையும் செய்யவோ மாட்டாது என்பதுடன் அட்டை

உறுப்பினர் ஏதேனும் பிணக்கை சேவை நிறுவனத்துடன் தீர்த்துக்கொள்ளுதலும் வேண்டும். பிணக்கொன்றிலிருந்து அட்டை உறுப்பினரை விடுவிக்கமாட்டாது

என்பதுடன் எத்தன்மையதுமான பிணக்கு அல்லது உரிமைக்கோரிக்கை எதுவும் முடிவுறாதிருப்பது எவ்வாறிருப்பினும் அத்தகைய அறவீடுகளை உடனடியாகச் செலுத்துவதற்கும் அவர் உடன்படுகின்றார் என்பது தெளிவாக விளங்கிக்கொள்ளப்படுதல் வேண்டும்.

23. **அட்டை உறுப்பின்களுக்குக் காப்புறுதிப் பாதுகாப்பு**

வங்கி அதன் தற்றுணிபின்பேரில் அட்டை உறுப்பினர் ஒருவருக்கு காலத்துக்குக்காலம் பல்வேறு காப்புறுதித் திட்டங்களை வழங்கலாம். ஆயினும் அத்தகைய காப்புறுதிமீதான எவையேனும் உரிமைக்கோரிக்கைகள் நேரடியாக அத்தகைய காப்புறுதியை வழங்கும் காப்புறுதிக் கம்பனிக்கு செய்யப்படுதல் வேண்டும். கொடுப்பனவு எதுவும் செய்யப்படாமைக்கு அல்லது அத்தகைய காப்புறுதியிலிருந்து எழக்கூடிய பிணக்கிற்கு வங்கி பொறுப்புடையதாகமாட்டாது. அத்தகைய பிரச்சினை எதுவும் அட்டை உறுப்பினருக்கும் காப்புறுதிக் கம்பனிக்குமிடையில் தீர்த்துக்கொள்ளப்படுதல் வேண்டும்.

வங்கியின் தற்றுணிபின்பேரில் திருத்தப்படக்கூடிய அல்லது திரிபுபடுத்தப்படக்கூடிய ஏற்புடைத்தான எல்லாக் காப்புறுதிப்பத்திரங்களையும் பற்றி வங்கியால் காலத்துக்குக்காலம் அறிவிக்கப்படும். காப்புறுதிக் கம்பனியால் தீர்மானிக்கப்பட்டவாறு புறம்பான நியதி நிபந்தனைகள் பல்வேறு காப்புறுதிப்பதிரங்களுக்கும் ஏற்புடையனவாகும்.

24. **வருமதியான குறைந்தபட்ச கொடுப்பனவு**

கணக்குக்கூற்று வருமதியான குறைந்தபட்ச கொடுப்பனவைக் காட்டும் தொகை வங்கியால் காலத்துக்குக்காலம் தீர்மானிக்கப்படும். இது கூற்றில் நிலுவையிலுள்ள மீதியின் நூற்றுவீதமொன்றாக அல்லது ஒரே அறவீட்டு வீதமொன்றாக (இதில் எது கூடியதோ அதன் அடிப்படையில்) கணிப்பிடப்படும். வருமதியான குறைந்தபட்ச கொடுப்பனவானது வருமதியாவதுடன் கொடுப்பனவு வருமதியான திகதியன்று அல்லது அதற்குமுன்னர் அட்டை உறுப்பினரால் வங்கிக்கு செலுத்தப்படற் பாலதுமாகும். கொடுப்பனவு வங்கியால் பெறப்பட்டு அதனை வங்கி அட்டை உறுப்பினரின் கணக்கில் வரவுவைக்கும்பொழுது மாத்திரமே அத்தகைய கொடுப்பனவு இடம்பெறும். அட்டை உறுப்பினர் அதனை அனுப்பிவைக்கும் பொழுதிலல்ல.

அட்டைக் கணக்கு நிலுவையிலிருப்பின் அல்லது கடன் வரையறை வரம்பு மீறியிருப்பின் அட்டை உறுப்பினர் அதனை உடனடியாக வங்கிக்குச் செலுத்துமாறு தேவைப்படுத்தப்படுவார். அத்தகைய நிலுவையைப் பற்றி கூற்றில் அறிவிக்கப்படும். அட்டை உறுப்பினரால் வங்கிக்குச் செலுத்தப்படும் கொடுப்பனவு வருமதியான குறைந்தபட்ச கொடுப்பனவைவிடக் கூடுதலாக இருக்கலாம். அல்லது கொடுப்பனவு வருமதியான திகதிக்கு முன்னர் அல்லது விலைப்பட்டியலிடும் காலப்பகுதியில் ஒரு தடவைக்கு மேல் செலுத்தப்படலாம்.

அத்தகைய கொடுப்பனவுகள் வங்கிக்கு இலங்கை ரூபாவில் கூற்றில் குறிப்பிடப்பட்ட முறையில் செலுத்தப்படுதல் வேண்டும்.

25. **பொறுப்புகளின் புறநீக்கம்**

பின்வருவனவற்றிலிருந்து நேரடியாகவோ மறைமுகமாகவோ எழும் ஏதேனும் நட்டம் அல்லது சேதம் தொடர்பில் அட்டை உறுப்பினர் மட்டில் வங்கி எத்தன்மையதுமான பொறுப்பெதுவும் உடையதாகமாட்டாது:

அ) வழங்கப்பட்ட எவையேனும் பண்டங்களில் அல்லது சேவைகளில் எவையேனும் குறைபாடுகள்;

ஆ) எவரேனுமாள் அட்டையை ஏற்றங்கீகரிக்க அல்லது ஏற்க மறுத்தல்;

இ) ஏதேனும் கணனி முனையம் அத்துடன்/அல்லது EDC பொறி செயலிழத்தல்;

ஈ) அட்டை உறுப்பினர் தவிர்ந்த வேறு எவராலும் கொடுக்கல்வாங்கல் அறிவுறுத்துதல் வழங்கப்படுதல்;

உ) அட்டையைத் திருப்பிக்கொடுக்குமாறு வேண்டுகோள் விடுக்கும் எவரேனும் ஆளினால் செய்யப்பட்ட ஏதேனும் கூற்று அல்லது அத்தகைய வேண்டுகோள் தொடர்பில் எவரேனும் ஆளினால் புரியப்பட்ட ஏதேனும் செயல்;

எ) அட்டையின் முகப்பில் புடைப்புரு பதிக்கப்பட்ட திகதி முடிவடைவதற்கு முன்னர் அட்டையை ஒப்படைக்குமாறு செய்யப்பட்ட கோரிக்கையும் அத்துடன்/அல்லது அட்டையைப் பெற்றுக்கொண்டமைக்கு வங்கியால்

நேரடியாக செய்யப்பட்டிருப்பினுஞ்சரி அல்லது சேவை நிறுவனம் ஒன்றின் அல்லது வங்கியின் முகவர் ஒருவரின் ஊடாக செய்யப்பட்டிருப்பினும்சரி அட்டையை ஒப்படைக்குமாறு கோருவதற்கும் பெற்றுக்கொள்வதற்குமான அதன் உரிமைகள் வங்கியால் பிரயோகிக்கப்படுதல்;

ஏ) ஏதேனும் அட்டையை அல்லது அட்டைக் கணக்கை முடிவுறுத்துவதற்கான அதன் உரிமை வங்கியால் பிரயோகிக்கப்படுதல்;

ஐ) அட்டையை மீள் உடைமை கொள்வதனால் அத்துடன்/அல்லது அதனைத் திருப்பிக்கொடுக்குமாறு விடுக்கப்பட்ட ஏதேனும் வேண்டுகோளினால் ஏதேனும் சேவை நிறுவனம் அட்டையை ஏற்றங்கீகரிக்க அல்லது ஏற்றுக்கொள்ள மறுப்பதனால் விளைவிக்கப்பட்டுள்ளதால் சார்த்துரைக்கப்பட்ட விண்ணப்பகாரரின் அல்லது அட்டை உறுப்பினரின் நற்பண்பிற்கு அல்லது நன்மதிப்புக்கு ஏற்படும் ஏதேனும் ஊறு;

ஒ) வங்கியால் 26ஆம் பிரிவைப் பின்பற்றி வங்கியால் வெளிப்படுத்தப்பட்ட எவையேனும் விவரங்களில் பிறழ்கூற்று, பிறழ் விளக்கவுரை, தவறு அல்லது விட்டுவிடுகை;

ஓ) எத்தன்மையதுமான ஏதேனும் காரணத்தினால் அறவீடொன்றில் மறுப்பு;

ஔ) அட்டை உறுப்பினரிடமிருந்து நிலுவையிலுள்ள வருமதிகளை செலுத்தித்தீர்க்குமாறு வங்கியால் அல்லது வங்கியின் சார்பில் செயற்படும் எவரேனும் ஆளினால் கோரிக்கை அல்லது உரிமைக்கோரிக்கையொன்று விடுக்கப்படும்பட்சத்தில் அத்தகைய கோரிக்கை அல்லது உரிமைக்கோரிக்கை அவதூறான ஒரு செயல் என அல்லது அட்டை உறுப்பினரைப் பங்கப்படுத்தும் அல்லது அவரது நற்பண்புகள்மீது பிரதிபலிக்கும் ஒரு செயல் எனக் கருதப்படமாட்டாது என்பதற்கு அட்டை உறுப்பினர் உடன்படுவதுடன் ஒப்புறுதியும் செய்கின்றார்.

க) தொடர்பாடல்களும் பல்வேறு சேவைகளுக்கான ஏற்பாடுகளும் மூன்றாம் திறத்தவரான சேவை வழங்குநர் ஒருவரால் அத்துடன்/அல்லது மூன்றாம் திறத்தவரான அத்தகைய சேவை வழங்குநரின் ஒப்பந்தக்காரர்களால் வழங்கப்படுவதுடன் அவற்றிற்கு மூன்றாம் திறத்தவரான சேவை வழங்குநரால் அல்லது வங்கியால் கொடுப்பனவு செய்யவும்படுகின்றது. பயன்படுத்தப்பட்ட அத்தகைய எவையேனும் சேவைக்கு அத்துடன் எல்லா

சேவைகளுக்கும் அட்டை உறுப்பினரே பொறுப்புடையவராவார். உதவி மிகச் சிறந்த முயற்சியொன்றின் அடிப்படையில் வழங்கப்படுகின்றது. நேரம், தூரம் அல்லது அமைவிடங்கள் ஆகிய பிரச்சினைகள் காரணமாக சேவை கிடைக்காமலிருக்கலாம். மூன்றாம் திறத்தவரான சேவை வழங்குநர்களால் ஆலோசனையாக முன்வைக்கப்பட்ட அத்துடன்/அல்லது குறித்தொதுக்கப்பட்ட காப்புறுதி, மருத்துவ அத்துடன்/அல்லது சட்ட உயர் தொழிலர்கள் அவர்களது ஊழியர்களோ அல்லது மூன்றாம் திறத்தவர்களான சேவை வழங்குநர்களது ஒப்பந்தக்காரர்களின் ஊழியர்களோ அல்ல. ஆதலால் சேவைகள் கிடைக்கும் வாய்ப்பு, பயன்பாடு, செயல்கள், செய்யாமை அல்லது ஏதேனும் காப்புறுதி, மருத்துவம், சட்டம் என்பவற்றின் அல்லது வேறு எவையேனும் சேவைகளின் பெறுபேறுகளுக்கு அவர்கள் பொறுப்புடையவர்களல்லர். சேவைகளின் ஏற்பாட்டிற்கு அல்லது வழங்கப்பட்ட சேவைகளின் பயன்பாட்டிற்கு எத்தன்மையதுமான இயல்பினதான பொறுப்புடைமை அல்லது பொறுப்பு எதனையும் வழங்க ஏற்கமாட்டாது.

26. **தகவலை வெளிவிடுதல்**

இந்த 26ஆம் பிரிவில் இதனகத்துப்பின்னர் ஏற்பாடு செய்யப்பட்டதற்கு அமைய அட்டை உறுப்பினருக்கும் வங்கிக்கும் இடையிலான கொடுக்கல்வாங்கல்களின் அல்லது நடவடிக்கைகளின் எல்லா விவரங்களினதும் அந்தரங்கத்தன்மை பொதுச் சட்டத்தால் தேவைப்படுத்தப்பட்ட அளவுக்கு வங்கியால் பேணப்படும். முற்போந்தது எவ்வாறிருப்பினும் அட்டை உறுப்பினரைப் பற்றிய அத்துடன்/அல்லது அட்டைக் கணக்கைப் பற்றிய தகவலைப் பின்வருவோருக்கு வழங்குவதற்கு அட்டை உறுப்பினர் இத்தால் வங்கிக்கு அதிகாரமளிக்கின்றார்:

அ) ஏதேனும் வங்கிக்கு அல்லது நிதி நிறுவனத்திற்கு அல்லது கடன் பணியகத்திற்கு அல்லது கடன் பணியகமொன்றை அல்லது தவணை தவறும் வாடிக்கையாளர்களின் தரவுத்தளத்தை முகாமை செய்யும் பொது சேவை வழங்குநருக்கு;

ஆ) வங்கியின் உள்ளவாறான அல்லது முன்மொழியப்பட்ட எவரேனும் சாட்டுதல் பெறுநருக்கு அல்லது இந்த உடன்படிக்கை அல்லது அட்டைக் கணக்கு

தொடர்பில் வங்கியின் எவையேனும் உரிமைகளில் பங்கேற்குநருக்கு, துணைப் பங்கேற்குநருக்கு அல்லது மாற்றம்பெறுநருக்கு;

இ) வங்கிக்கு அல்லது ஏதேனும் சார்புடைய கம்பனிக்கு அந்தரங்கத்தன்மை என்னும் கடமையின்கீழுள்ள எவரேனும் முகவருக்கு, ஒப்பந்தகாரருக்கு அல்லது சேவை வழங்குநருக்கு;

ஈ) எவரேனும் மேற்பார்வை அல்லது ஒழுங்குபடுத்தும் அதிகாரிக்கு;

உ) இலங்கைச் சட்டங்களுக்கிணங்க அவ்வாறு செய்யுமாறு கட்டளையிடப்பட்டபோது எவரேனும் ஆளுக்கு;

ஊ) வர்த்தகப் பாவனைக்கென வங்கியுடன் தொடர்புடைய ஏதேனும் கம்பெனியின் ஏதேனும் அலுவலகம் அல்லது கிளை; அல்லது

(எ) அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் கம்பனி அல்லது அதனோடு இணைந்த எவையேனும் கம்பனிகள்.

27. **காணாமற்போன அட்டைக்கான கொடுப்பனவு**

27.1 அட்டையொன்று காணாமற்போயின் அல்லது களவுபோயின் அட்டை உறுப்பினர் உடனடியாக இலங்கையிலுள்ள வங்கியின் அட்டை நிலையத்திற்கு அறிவித்தல் வேண்டும். அட்டை உறுப்பினர் காணாமற்போன/களவு நிகழ்ந்த இடத்தின் உள்ளூர் பொலிசுடன்/சட்டத்தை வலுவுக்கிடும் முகவராண்மையுடன் அறிக்கையொன்றைக் கோப்பிடுதலும் வேண்டும். காணாமற்போனமையைப் பற்றி இலங்கையிலுள்ள வங்கியின் அட்டை நிலையத்திற்கு அறிவிக்கப்படும்வரை அட்டையின்மீது உறப்பட்ட அறவீடுகளுக்கு அட்டை உறுப்பினரே பொறுப்பாதல் வேண்டும்.

அட்டை உறுப்பினர் ஒருவர் காணாமற்போன அட்டையைப் பற்றி தொலைபேசிமூலம் அறிவிக்கலாம். அதனையடுத்து அட்டை காணாமற்போனமையை உறுதிப்படுத்தும் அறவீடுகள் எவையுமிருப்பின் அவற்றிற்கான கோரிக்கையைக் கைவிடுவதுமான நொத்தாரிசு ஒருவரின் முன்னிலையில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட சத்தியக்கடதாசியின் பிரதியொன்றையும் அத்துடன் காணாமற்போனமை இடம்பெற்ற இடத்தின் உள்ளூர் பொலிசு அதிகாரிகளுடன்/சட்டத்தை வலுவுக்கிடும் முகவராண்மைகளுடன் தாக்கல் செய்யப்பட்ட அறிக்கையின் கையொப்பமிடப்பட்ட பிரதியொன்றையும் வங்கியின் அட்டை நிலையத்திற்கு அனுப்பிவைப்பதன்மூலம் அதனை ஆதாரப்படுத்துதல் வேண்டும். வங்கி போதியளவு பரிசீலனையின்மீது அட்டைக் கணக்கை

தற்காலிகமாக இடைநிறுத்தலாம். இக்கணக்கின்மீது அட்டை உறுப்பினருக்கு ஏற்படுத்தப்பட்ட வசதியீனங்களுக்கு வங்கி பொறுப்பாகமாட்டாது. இலங்கையிலுள்ள வங்கியின் அட்டை நிலையத்திற்குப் பயனுறுதியுள்ள அறிவித்தல் வழங்கப்படும்வரை அட்டைக் கணக்கிற்கு பற்றுவைக்கப்பட்டவையும் கொடுக்கல்வாங்கல்கள் முடிவுறுதாதிருக்கையில் இன்னமும் அட்டைக் கணக்கிற்கு பற்றுவைக்கப்படவுள்ளவையுமான எல்லாத் தொகைகளுக்கும் அட்டை உறுப்பினர் பொறுப்புடையவராதல் வேண்டும். அட்டை காணாமற் போனதாக, களவுபோனதாக

அல்லது சேதமடைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டதும் அதன் விளைவாக ஏற்றங்கீகரிக்கப்படாத கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெறலாம். ஆதலால் அட்டை அதன்பின்னர் கண்டுபிடிக்கப்பட்டாலும்கூட அது மீண்டும் பயன்படுத்தப்படலாகாது. அட்டையொன்று காணாமற்போனதாக, களவுபோனதாக அல்லது சேதமுற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டு அதன்பின்னர் கண்டுபிடிக்கப்படின் அட்டையை வங்கியிடம் ஒப்படைத்து அதனை செல்லுபடியற்றதாக்குவது முற்றிலும் அட்டை உறுப்பினரின் பொறுப்பாகும் என அட்டை உறுப்பினர் வெளிப்படுத்துகின்றார். எல்லா நேரங்களிலும் அட்டையின் பாதுகாப்பிற்கு அட்டை உறுப்பினரே பொறுப்புடையவராவார் என்பதுடன் அதனை உறுதிப்படுத்துவதற்கான எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுதலும் வேண்டும். மேற்கூறப்பட்ட நடவடிக்கைகள் கேள்விக்குட்படுத்தப்படக்கூடியன என வங்கி தீர்மானிக்குமாயின் அது அட்டைக் கணக்கை இல்லாதொழிக்கலாம்.

27.2 அட்டை காணாமற்போனமை, களவுபோனமை அல்லது சேதமடைந்தமை தொடர்பான சூழ்நிலைகள் பற்றி அட்டை உறுப்பினர் தம்மகத்தே கொண்டுள்ள எல்லா தகவலையும் வங்கிக்கு வழங்குதல் வேண்டும் என்பதுடன் காணாமற்போன அட்டையைக் கண்டுபிடிப்பதில் அவசியமானது என வங்கியால் கருதப்படும்வரை எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுதலும் வேண்டும்.

27.3 அட்டை தொடர்பில் வணிகர் வலையமைப்பிற்கு அறிவிப்பதிலான நிர்வாகச் செலவை ஈடுசெய்வதற்கு வங்கி விதிப்பனவொன்றை அறவிடும்.

27.4 அட்டையொன்று காணாமற்போனமையை அல்லது களவுபோனமையை அடுத்து அட்டையொன்றை வழங்குவதற்கான ஏதேனும் கடப்பாட்டிற்கு வங்கி உட்படமாட்டாது. ஏதேனும் பதிலீட்டு அட்டை கையாளும்

கட்டணமொன்றுக்கு அமைவானதாகும். இது வங்கியால் தீர்மானிக்கப்படவுள்ள வீதமொன்றில் அட்டை கணக்கில் பற்றுவைக்கப்படும் என்பதுடன் வங்கி அவ்வாறு தீர்மானிக்குமிடத்து மூல அட்டைக்குப் போன்று அதே நியதி நிபந்தனைகள்மீது வழங்கப்படும்.

27.5 PIN அத்துடன்/அல்லது T-PIN இலக்கம் காமாணற்போகும், களவுபோகும் அல்லது வேறு எவரேனும் திறத்தவருக்கு வெளிப்படுத்தப்படும்பட்சத்தில் அட்டை உறுப்பினர் அத்தகைய காணாமற்போனமையை அல்லது வெளிவிடுகையை அதனைப்பற்றிய விவரங்களுடன் சேர்த்து பிரிவு 27.1 மற்றும் 27.2 என்பவற்றில் உள்ளவாறு அட்டை உறுப்பினர் உடனடியாக வங்கிக்கு வழங்குதல் வேண்டும்.

28. **கொடுப்பனவு**

28.1 அட்டை உறுப்பினர் கணக்குக்கூற்று கிடைக்கப்பெற்றதன்மீது குறைந்தபட்சம் கூற்றில் விவரிக்கப்பட்ட “வருமதியான கொடுப்பனவின் குறைந்தபட்ச மொத்தத்தை” யாவது வங்கிக்குச் செலுத்துதல் வேண்டும். கணக்குக்கூற்று அட்டை உறுப்பினரால் கிடைக்கப்பெற்றதன்மீது வருமதியான கொடுப்பனவின் குறைந்தபட்ச மொத்தத்தை அடிப்படை அட்டை உறுப்பினருடன் சேர்ந்து

வங்கிக்குச் செலுத்துவதற்கு குறைநிரப்பு அட்டை உறுப்பினர் கூட்டாகவும் தனித்தும் பொறுப்புடையவராவார்.

28.2 இந்த நியதி நிபந்தனைகளிலுள்ள எதுவும் சட்டத்தில் அல்லது வங்கிக்கும் அட்டை உறுப்பினருக்குமிடையில் காலத்துக்குக் காலம் நிலவும் வேறு ஏதேனும் உடன்படிக்கையைப் பின்பற்றி பணங்களை எதிரீடு செய்வதற்கும் கைமாற்றுவதற்கும் பிரயோகிப்பதற்கும் வங்கிக்குள்ள உரிமையைப் பாதிக்கமாட்டாது. வங்கிக்கு சோந்தையின்கீழ் வைத்திருக்கப்படும் வைப்பீடொன்றின் ஆதாரத்திற்கெதிராக அட்டைக் கணக்கு ஆரம்பிக்கப் பட்டுள்ளவிடத்து இதன்கண் வரைவிலக்கணம் கூறப்பட்டவாறு கொடுப்பனவுகள் நிலுவையிலிருக்கும்/வருமதியாகவிருக்கும் பட்சத்தில் வைப்பீட்டின் வருவாய்கள் அட்டை உறுப்பினருக்கு அறிவித்தல் எதுவுமின்றி அட்டைக் கணக்கிலுள்ள நிலுவைக்கெதிராக சீராக்கப்படும்.

28.3 அட்டை உறுப்பினரின் பொறுப்புகள் தொடர்பில் வங்கிக்கான கொடுப்பனவுகள், இயைபான விடுவிக்கப்பட்ட நிதிகள் வங்கியால் பெறப்படுகின்றவாறான அத்தகைய நேரம்வரை செய்யப்பட் டுள்ளதாகக் கருதப்படமாட்டாது.

28.4 இந்த நியதி நிபந்தனைகளின்கீழ் வங்கிக்கு வருமதியான எல்லாப் பணத்தொகைகளும் வங்கியிடமிருந்து அல்லது வேறு எவரேனும் ஆளிடமிருந்து வருமதியான அல்லது வருமதியாகவிருப்பதாக அல்லது நிலுவையிலிருப்பதாக சார்த்துரைக்கப்பட்ட பணத்தின் எதிரீடு அல்லது எதிர்க்கோரிக்கை என்ற வகையில் அல்லது வேறு வகையில், எவரேனும் அட்டை உறுப்பினரின் ஏதேனும் சட்ட மட்டுப்பாடு, இயலாமை அல்லது வலுவின்மை எவ்வாறிருப்பினும் எத்தன்மையதுமான ஏதேனும் கழிப்பனவு எதுவுமின்றி செலுத்தப்படற்பாலதாதல் வேண்டும். அட்டை உறுப்பினருக்கு உரியனவும், வங்கியின் உடைமையில், கட்டுப்பாட்டில் அல்லது தத்துவத்தில் அல்லது உடைமையின்கீழ், கட்டுப்பாட்டின்கீழ் அல்லது தத்துவத்தின்கீழ் உள்ளவையுமான எல்லாச் சொத்துக்கள்/பணங்கள்/வைப்பீடுகள்/ பிணையங்களின் மீது வங்கி பொதுவான சோந்தையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

28.5 பண்டங்களின் அத்துடன்/அல்லது சேவைகளின் வழங்கல் தொடர்பில் வழங்கப்பட்ட ஏதேனும் கடன் வங்கியால் ஏற்றுக்கொள்ளப்படக்கூடியதும் ஏற்புடைத்தானவாறு நடைமுறையிலுள்ள அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் நியதி நிபந்தனை களுக்கிணங்கவுமுள்ள வடிவமொன்றில் வங்கி அட்டை நிலையத்தால் அறிவித்தலொன்று கிடைக்கப்பெற்றதன்பின்னர் மாத்திரமே வங்கியால் அட்டைக் கணக்கிற்குப் பிரயோகிக்கப்படும்.

28.6 கொடுப்பனவைக் குறிக்கும் காசோலையொன்று அது எந்த வங்கிக்காக வரையப்பட்டதோ அந்த வங்கியால் ஏதேனும் காரணத்திற்காக திருப்பியனுப்பப்படும்பட்சத்தில் அட்டை உறுப்பினர் ஏற்புடைத்தான சட்டத்தின்கீழ் குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளுக்கு ஆளாதல் வேண்டும்.

28.7 அட்டை உறுப்பினர் இறக்கும்பட்சத்தில், கடனிறுக்க வகையற்றவராகும்பட்சத்தில் அல்லது அவரது தொழில் ஒடுக்கப்படும்பட்சத்தில் அட்டைக் கணக்கில் நிலுவையிலிருக்கும் வருமதிகள் முழுவதும் அட்டை உறுப்பினரால், அவரது பின்னுறுபவர்களால், அல்லது சாட்டுதல் பெறுநர்களால் முழுமையாக செலுத்தப்படற்பாலதாதல் வேண்டும். கொடுப்பனவு செய்யும் பொறுப்பு அட்டை உறுப்பினரின் தொழில்தருநரால் ஏற்கப்படும் பட்சத்திலும் அத்தகைய தொழில்தருநரின் தொழில் எத்தன்மையதுமான ஏதேனும் காரணத்திற்கான ஒடுக்கப்படும், வங்கி முறிந்ததாகும் அல்லது கடனிறுக்க வகையற்றதென வெளிப்படுத்தப்படும்பட்சத்திலும் அத்துடன்/அல்லது அத்தகைய கொடுப்பனவைச் செய்ய இயலாதிருக்கும்பட்சத்திலும் எல்லா வருமதிகளையும் வங்கியின் பூரண திருப்திக்கு செலுத்தித்தீர்ப்பதற்கு அட்டை உறுப்பினர் தனிப்பட்ட முறையில் பொறுப்புடையவராக்கப்படுவார்.

28.8 கணக்குக்கூற்று கிடைக்கப்பெறாமை அறவீடுகளின் கொடுப்பனவை உரிய நேரத்தில் செலுத்தாமைக்குப் போதிய காரணமாக அட்டை உறுப்பினரால் பொருள்கொள்ளப் படுதலாகாது. எத்தன்மையதுமான ஏதேனும் காரணத்திற்காக கணக்குக்கூற்று கிடைக்கப்பெறாதபட்சத்தில் அவரது மிகவும் பிற்பட்ட மீதியையும் அத்துடன்/அல்லது கணக்குக்கூற்றின் இணைப்பிரதியையும் கோருவதற்கு வங்கிக்கு அழைப்பு விடுப்பதனையும் ஏற்புடைத்தான எல்லா அறவீடுகளினதும் மொத்தத்தொகையை வங்கிக்குச் செலுத்துவதனையும் அட்டை உறுப்பினர் பொறுப்பேற்கின்றார்.

28.9 காசோலையொன்று சேகரிப்புக்கு ஏற்றுக்கொள்ளப்படற்பாலதாதல் வேண்டும் என்பதுடன் காசோலை தீர்க்கப்பட்டு வருவாய்கள் பணம் செலுத்தும் வங்கியால் வங்கிக்குச் செலுத்தப்படும்வரை வருவாய்கள் கிடைக்கப்படமாட்டா. எவையேனும் காசு வைப்புகள் அவை அட்டைக் கணக்கில் வரவு வைக்கப்படுவதன்மீது மட்டுமே வங்கியால் பெறப்பட்டுள்ளதாகக் கருதப்படலாம்.

28.10 அட்டை உறுப்பினர், கொடுப்பனவு வருமதியான தினத்தன்று அட்டை உறுப்பினரின் நிலுவையிலுள்ள அட்டை விலைப்பட்டியல் தொகையின் நூற்றுவீதமொன்றை அட்டைக் கணக்கிற்கு கொடுப்பனவு செய்யுமாறு வங்கியுடனுள்ள நடைமுறை அல்லது சேமிப்புக் கணக்கிற்குப் பற்றுவைக்கும் நேரடியான நிலையியல் அறிவுறுத்துதலொன்றை வழங்கலாம்.

28.11 ஏதேனும் அத்தகைய அறிவுறுத்துதலுக்கான எவையேனும் திருத்தங்களும் இல்லாதொழித்தல்களும் குறைந்தபட்சம் அடுத்த கொடுப்பனவு வருமதியான திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னராவது வங்கிக்கு வந்து சேரவேண்டும் என்பதற்கு அட்டை உறுப்பினர் உடன்படுகின்றார்.

28.12 வங்கியுடனான தீர்த்தல் கணக்கொன்றுக்கு வழங்கப்பட்ட பற்றுவைக்கும் நேரடியான நிலையியல் அறிவுறுத்துதலுக்கு பின்வரும் மேலதிக நியதி நிபந்தனைகள் ஏற்புடையனவாகும்:

அ) ஏதேனும் அத்தகைய நிலையியல் அறிவுறுத்துதலின் முந்துரிமையை முன்வைக்கப்பட்ட காசோலைகளுக்கு அல்லது வங்கியுடனான வேறு எவையேனும் ஏற்பாடுகளுக்கெதிராகத் தீர்மானிப்பதற்கான உரிமை வங்கிக்குண்டு என்பதற்கு அட்டை உறுப்பினர் உடன்படுகின்றார்.

ஆ) நிலையியல் அறிவுறுத்துதலை நிறைவேற்றுவதற்கு கொடுப்பனவு வருமதியாகும் திகதிக்கு முந்திய நாளன்று குறித்தொதுக்கப்பட்ட தீர்த்தல் கணக்கில் போதியளவு நிதியைத் திரட்டி வைப்பதற்கு அட்டை உறுப்பினர் உடன்படுகின்றார். தீர்த்தல் கணக்கில் போதியளவு மீதி இல்லாதபட்சத்தில் நிலையியல் அறிவுறுத்துதல்களின்படி கொடுப்பனவுத் தொகையை ஈடுசெய்வதற்கு வங்கி காலத்துக்குக்காலம் அதன் தற்றுணிபின்படி மேலதிகப் பற்றுக்களை வழங்கலாம். அட்டை உறுப்பினர் நிலுவையிலுள்ள எல்லாத் தொகைகளையும் வங்கியால் காலத்துக்குக்காலம் தீர்மானிக்கப்படவேண்டிய வீதப்படி

அதன்மீது திரண்ட நிதி அறவீட்டுடன் சேர்த்து மீளச் செலுத்துவதற்கு அட்டை உறுப்பினர் பிணிக்கப்படுகின்றார்.

28.13 அட்டை உறுப்பினருக்கு அட்டை வழங்கப்பட்டபோது திகதியிடப்படாத காசோலையொன்று அத்துடன்/அல்லது பிணைய பணச் சொத்து ஒன்று கோரப்படாத போதிலும்கூட வங்கி தேவைப்படுத்தக்கூடிய தொகைக்கு வங்கியின் சார்பில் திகதியிடப்படாத காசோலையொன்றை அல்லது பிணைய பணச்சொத்து ஒன்றை அட்டை உறுப்பினர் வைப்பீடு செய்யவேண்டும் என ஏதேனும் நேரத்தில் வங்கி கோரிக்கை விடுக்கலாம். அத்தகைய விடயத்தில் சொல்லப்பட்ட காசோலையில் திகதியை உட்புகுத்தி வங்கிக்கு வருமதியான ஏதேனும் தொகைக்கு எதிராக உட்புகுத்தப்பட்ட திகதியன்று அதனைக் கொடுப்பனவுக்காக முன்வைப்பதற்கு அட்டை உறுப்பினர் வங்கிக்கு அதிகாரமளித்துள்ளதாகக் கருதப்படுவார்.

28.14 அட்டை உறுப்பினர் ஏதேனும் பணத்தை அது வருமதியானபோது அல்லது வேறு வகையில் அது வருமதியாக வரக்கூடிய திகதிக்கு முன்னர் வருமதியாகவுள்ளதென வெளிப்படுத்தப்படக்கூடிய பணத்தை செலுத்தத் தவறினால் அல்லது எந்த உடன்படிக்கையின்கீழ் அட்டை உறுப்பினர் ஏதேனும் நிதி/கடன்/வேறு வசதியை அனுபவிக்கின்றாரோ அந்த ஏதேனும் உடன்படிக்கையின்கீழ் வேறு ஏதேனும் தவணை தவறுகையைப் புரிவாராயின், அப்போது அத்தகைய விடயத்தில் வங்கி ஒவ்வொரு உடன்படிக்கையின்கீழும் அல்லது இந்த உடன்படிக்கையின்கீழ் குறித்துரைக்கப்பட்ட அதன் உரிமைகள் எவற்றிற்கும் பங்கமின்றி வங்கியின் ஏக தற்றுணிபின்படி அதன் எல்லா உரிமைகளையும் அல்லது ஏதேனும் உரிமையைப் பிரயோகிப்பதற்கு பூரண உரித்துடையதாதல் வேண்டும்.

28.15 எவரேனும் அட்டை உறுப்பினர்களிடமிருந்து வருமதி யாகவுள்ள நிலுவைத் தொகையை சேகரிப்பதற்கு வருமதிகளை அதன் அதிகாரமளிக்கப்பட்ட
முகவராண்மைக்குக் குறித்தொதுக்குவதற்கான உரிமையை வங்கி கொண்டுள்ளதுடன் அவ்வாறு செய்வதில் அதனால் உறப்பட்ட செலவுகளை அட்டை உறுப்பினரின் கணக்கில் அறவீடு செய்வதற்கும் வங்கி உரித்துடையதாதல் வேண்டும்.

28.16 அட்டை உறுப்பினரால் அல்லது அவர்சார்பில் அனுப்பப்பட்ட ஏதேனும் கொடுப்பனவு சாதனம் ஏற்றங்கீகரிக்கப்படாத விடயத்தில் அட்டை உறுப்பினருக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான உரிமை வங்கிக்குண்டு; அத்துடன் அதன் தற்றுணிபின்பேரில் தண்டனைக் கட்டணங்களை அறவிடும் அத்துடன்/அல்லது அட்டைக் கணக்கை இல்லா தொழிக்கும் உரிமையை வங்கி கொண்டுள்ளது.

28.17 இந்த உடன்படிக்கையின் ஏனைய ஏற்பாடுகளுக்குப் பங்கமின்றி, அட்டை உறுப்பினர் ஒரு மாதத்திற்கு மேலாக இலங்கையில் இல்லாதிருப்பின் அவர் புறப்பட்டுச் செல்வதற்குமுன்னர் அட்டைக் கணக்கை செலுத்தித் தீர்ப்பதற்குத் தெளிவானதும் குறித்துரைக்கப்பட்டதுமான அறிவுறுத்துதல்களை விட்டுச் செல்லவேண்டும் என்பதுடன் அத்தகைய அறிவுறுத்துதல்களை வங்கியின் அட்டை நிலையத்திற்கு அறிவித்தலும் வேண்டும்.

## 29. திருத்தங்கள்

இந்த உடன்படிக்கையின் எவையேனும் நியதிகளை ஏதேனும் நேரத்தில் முன்னறிவித்தல் எதுவுமின்றி வேறுபடுத்துவதற்கான, திருத்துவதற்கான அத்துடன்/அல்லது பதிலீடு செய்வதற்கான உரிமை வங்கிக்குண்டு. ஏதேனும் அத்தகைய திருத்தம் கீழேயுள்ள 31ஆம் பிரிவின் நியதிகளின்படி வழங்கப்பட்ட அறிவித்தலுக்கிணங்க பயனுடையதாகவும் அட்டை உறுப்பினர்மீது பிணிக்கின்றதாகவும் கருதப்படுதல் வேண்டும்.

30. **எச்சரிக்கை சிற்றேடு**

எத்தன்மையதுமான காரணம் எதுவும் காட்டாமல் அட்டையைப் பறிமுதல் செய்யுமாறு சேவை நிறுவனத்திற்கு அறிவித்து இலங்கையில் அல்லது வெளிநாட்டிலுள்ள எச்சரிக்கை சிற்றேட்டில் அட்டையைப் பற்றி குறிப்பீடு செய்வதற்கான பூரண உரிமையும் தற்றுணிபும் வங்கிக்குண்டு.

31. **அறிவித்தல்கள்**

வங்கி அட்டை உறுப்பினருக்கு ஏதேனும் அறிவித்தலை முற்கொடுப்பவு செய்யப்பட்ட அஞ்சல்மூலம் அட்டை உறுப்பினரின் வழமையான அல்லது கடைசியாக அறியப்பட்ட முகவரிக்கு அனுப்புதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய ஆவணம் வழங்கப்பட்ட முகவரிக்கு அனுப்பிவைக்கப்பட்டதன்மீது முறையாக சேர்ப்பிக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படுதலும் வேண்டும். கணக்குக்கூற்றில் குறிப்பிட்ட அல்லது அதன் ஒரு பாகமாக ஆக்கப்பட்ட அட்டைக் கணக்கு தொடர்பிலான ஏதேனும் தகவலும் அல்லது அறிவிப்பும் இந்த உடன்படிக்கையின்கீழான ஓர் அறிவித்தலாகக் கருதப்படுதல் வேண்டும்.

அட்டை உறுப்பினர் ஏதேனும் அறிவித்தலை வங்கிக்கு முற்கொடுப்பனவு செய்யப்பட்ட அஞ்சல்மூலம் பின்வரும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும் அல்லது உறுதிப்படுத்துதல் வேண்டும்.

**நேஷன்ஸ் ட்ரஸ்ட் பேங்க் பிஎல்சீ,**
அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் அட்டை நிலையம்,
256, ஸ்ரீமத் ராமநாதன் மாவத்தை,
கொழும்பு 15.

32. **வலுவுக்கிடும் செலவுகள்**

ஒவ்வொரு குறைநிரப்பு அட்டை உறுப்பினரும் எல்லா சட்டச் செலவுகளும் செலவீடுகளும் உட்பட இந்த நியதி நிபந்தனைகளை வலுவுக்கிடுவதில் அல்லது வலுவுக்கிடுவதற்கான எத்தனிப்பில் வங்கியால் உறப்பட்ட ஏதேனும் செலவு மற்றும் எவையேனும் செலவுகள் தொடர்பில் முழு நட்டோத்தரவாதத்தின் அடிப்படையில் வங்கியை நட்டோத்தரவாதம் செய்து வைப்பதற்கு கூட்டாகவும் தனித்தனியாகவும் பொறுப்புடையவர்களாதல் வேண்டும்.

33. **குறைநிரப்பு அட்டை**

வங்கி அதன் ஏக தற்றுணிபின்பேரில் அட்டை உறுப்பினர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு காலத்துக்குக்காலம் வங்கியால் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய நியதி நிபந்தனைகளின்மீது குறைநிரப்பு அட்டையொன்றின் வசதியை வழங்கலாம். கணக்கின்மீது ஏதேனும் குறைநிரப்பு அட்டையை(அட்டைகளை) வைத்திருப்பவரும்(வைத்திருப்பவர்களும்) அதனை(அவற்றை) வழங்குவதற்கு அதிகாரமளித்த அட்டை உறுப்பினரும் அட்டையை (அட்டைகளை)ப் பயன்படுத்துவதன்மூலம் உறப்பட்ட எல்லா அறவீடுகளுக்கும் கூட்டாகவும் தனித்தனியாகவும் பொறுப்பாதல் வேண்டும். குறைநிரப்பு வசதியானது அடிப்படை அட்டை உறுப்பினர் தொடர்ந்திருப்பதில் தங்கியுள்ளது.

34. **கொடுப்பனவுகளின் பிரயோகம்**

அட்டை உறுப்பினரிடமிருந்து அல்லது அவர் சார்பில் வங்கியால் பெறப்பட்ட ஏதேனும் கொடுப்பனவு மற்றும் எவையேனும் கொடுப்பனவுகள் அட்டை உறுப்பினரால் அல்லது கொடுப்பனவைச் செய்யும் வேறு எவரேனும் ஆளினால் வழங்கப்பட்ட திட்டவட்டமான ஏதேனும் கணக்கீட்டு அறிவித்தல் எவ்வாறிருப்பினும் வங்கி பொருத்தமானதெனக் கருதும் முறையிலும் அத்தகைய ஒழுங்குமுறையிலும் பிரயோகிக்கப்படலாம் அல்லது ஒதுக்கீடு செய்யப்படலாம்.

35. **தொலைபேசி, இணையம், படிம அச்சு (டெலெக்ஸ்), தொலைநகல் மற்றும் மின்னஞ்சல் மூலமான அறிவுறுத்துதல்களுக்கு அதிகாரமளித்தலும் நட்டோத்தரவாதமும்.**

35.1 அட்டை உறுப்பினரால் அல்லது அவர் சார்பில் தொலைபேசி, இணையம், படிம அச்சு (டெலெக்ஸ்) தொலைநகல் அல்லது மின்னஞ்சல் மூலம் காலத்துக்குக்காலம் வழங்கப்படக்கூடிய அல்லது வழங்கப்பட்டதாகக் கருதப்பட்ட ஏதேனும் அறிவித்தல், அறிவுறுத்துதல், கோரிக்கை அல்லது வேறு தொடர்பாடல்மீது அறிவுறுத்துதலை வழங்கும் அல்லது வழங்குவதாகக் கருதப்பட்ட ஆளின் அதிகாரம் அல்லது ஆளடையாளம் தொடர்பாக முற்போந்ததன் பொதுமைக்குப் பங்கமின்றியும் அறிவுறுத்துதல்கள் கிடைக்கப்பெற்ற நேரத்தில் நிலவும் சூழ்நிலைகளைப் பொருட்படுத்தாமலும் வங்கியால் விசாரணை எதுவும் மேற்கொள்ளப்படாமலும் தங்கியிருப்பதற்கும் அதற்கிணங்க

செயற்படுவதற்கும் அட்டை உறுப்பினர் வங்கிக்கு அதிகாரமளிக்கின்றார். அட்டை உறுப்பினர் அறிவுறுத்துதல்கள் கிடைக்கப்பெற்ற நேரம்/திகதி பற்றி வங்கியின் விதிமுறையை ஏற்றுக்கொள்வார்.

35.2 அறிவுறுத்துதல்கள் அட்டை உறுப்பினரால் முற்றாக அதிகாரமளிக்கப்பட்டவையாகவும் அவர்மீது பிணிக்கின்றதாகவும் கருதுவதற்கு வங்கி உரித்துடையதாதல் வேண்டும் என்பதுடன் அறிவுறுத்துதலானது பணம் செலுத்துவதற்காகவாயினுஞ்சரி அல்லது வேறு வகையில் ஏதேனும் கணக்கில் பற்று வைப்பதற்காகவாயினுஞ்சரி வரவு வைப்பதற்காகவாயினுஞ்சரி ஏதேனும் பணத்தின் அல்லது ஆவணங்களின் உடைமையகற்றுவது தொடர்பிலாயினுஞ்சரி அட்டை உறுப்பினரை வங்கியோடு அல்லது வேறு எவரேனும் ஆளோடு ஏதேனும் உடன்படிக்கையுடன் அல்லது வேறு ஏற்பாட்டுடன் பிணிப்பதற்கென கருதப்பட்டதாயினுஞ்சரி அல்லது எத்தன்மையதுமான ஏதேனும் வேறு வகையினதான கொடுக்கல் வாங்கலுக்கு அல்லது ஏற்பாட்டிற்கு அட்டை உறுப்பினரை பாரப்படுத்துவதற்காயினுஞ்சரி கொடுக்கல் வாங்கலின் அல்லது ஏற்பாட்டின் தன்மையை அல்லது சம்பந்தப்பட்ட தொகையைப் பொருட்படுத்தாமலும் அறிவுறுத்துதல்களின் நியதிகளில் ஏதேனும் தவறு, கருத்துமயக்கம், கருத்துவேறுபாடு அல்லது தெளிவின்மை எவ்வாறிருப்பினும் வங்கி தோதானதெனக் கருதுகின்றவாறு அறிவுறுத்துதல்கள் தொடர்பில் அல்லது அவற்றின்மீது நம்பிக்கை வைத்து அத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் வங்கி உரித்துடையதாதல் வேண்டும்.

35.3 வங்கி இந்த அதிகாரமளிப்பின் அல்லது நட்டோத்தரவாதத்தின் நியதிகளுக்கிணங்க செயற்படுவதற்குக் கிரயமாக வங்கியால் உறப்பட்ட அல்லது வங்கிக்கு ஏற்பட்ட எல்லா நட்டங்களுக்கும் உரிமைக்கோரிக்கைகளுக்கும் வழக்குகளுக்கும் வழக்குநட வடிக்கைகளுக்கும் கோரிக்கைகளுக்கும் சேதங்களுக்கும் செலவுகளுக்கும் செலவினங்களுக்கும் எதிராக அவை எத்தன்மைய இயல்பினவான இருப்பினும்சரி அறிவுறுத்துதல் களிலிருந்து அல்லது அவை தொடர்பில் எவ்வாறு

எந்தளவிலாயினும்சரி வங்கியை நட்டோத்தரவாதம் செய்யவும் நட்டோத்தரவாதம் செய்துவைக்கவும் அட்டை உறுப்பினர் இத்தால் அழிக்கமுடியாதவாறு பொறுப்பேற்கின்றார்.

35.4 இந்த அதிகாரமளிப்பினதும் நட்டோத்தரவாதத்தினதும் நியதிகள் வங்கி அட்டை உறுப்பினரிடமிருந்து முடிவுறுத்துதல் அறிவித்தல் கிடைக்கப்பெற்றாலன்றியும் கிடைக்கப்பெறும் வரையிலும் அத்துடன் அதன்மீது செயற்படுவதற்கு நியாயமான கால அவகாசம் இருந்தாலன்றியும் இருக்கும் வரையிலும் முழு வலுவிலும் பயனுறுதியுடனும் இருத்தல் வேண்டும். ஆயினும் அத்தகைய முடிவுறுத்துதலானது அத்தகைய காலப்பகுதி முடிவுறுவதற்குமுன்னர் இந்த அதிகாரமளிப்பினதும் நட்டோத்தரவாதத்தினதும் நியதிகளுக்கிணங்க புரியப்பட்ட ஏதேனும் செயல் தொடர்பில் இந்த அதிகாரமளிப்பின்கீழும் நட்டோத்தரவாதத்தின்கீழும் ஏதேனும் பொறுப்பிலிருந்து அட்டை உறுப்பினரை விடுவிக்கமாட்டாது.

36. **நானாவிதம்**

36.1 அட்டை உறுப்பினர் தொடர்பில் தேவைப்படுத்தப்படக்கூடிய ஏதேனும் மேலதிக தகவலைப் பெறுவதற்கு அவரது தொழில்தருநருடன் அல்லது வேறு ஏதேனும் ஆதார மூலத்துடன் தொடர்புகொள்வதற்கு அட்டை உறுப்பினர் இத்தால் வங்கிக்கு அதிகாரமளிக்கின்றார். விலைப்பட்டியலொன்றின்மீது வருமதியான கொடுப்பனவுகளைப்பற்றி அட்டை உறுப்பினருக்குத் தொலைபேசிமூலம் ஞாபகமூட்டுவதற்கும் அல்லது அட்டை உறுப்பினரின் சார்பில் தொலைபேசி அழைப்பைப் பெறுகின்ற ஆளுடன் ஞாபகமூட்டும் செய்தியொன்றை விட்டுவைக்க வங்கி உரித்துடையதாகின்றது என்பதற்கு அட்டை உறுப்பினர் உடன்படுகின்றார். அட்டையின்மீது செலுத்தப்படற்பாலதான வருமதிகள் தொடர்பில் எழுத்துமூலமாகவாயினுஞ்சரி வேறு வகையிலாயினுஞ்சரி அட்டை உறுப்பினருக்கு ஞாபகமூட்டுவதற்கு வங்கி எத்தன்மையதுமான கடப்பாட்டைக் கொண்டிருக்கமாட்டாது. அத்துடன் மேற்கூறப்பட்டதன்மீது வங்கி அதன் விருப்புத் தெரிவையும் உரிமையையும் பிரயோகித்தல் கேள்விக்குட் படுத்தப்படுதலாகாது.

36.2 தமது அட்டையின்மீது நிலுவையிலுள்ள ஏதேனும் மீதிக்கெதிராக அவரது சொத்துக்கள்/பணங்களை நடுக்கட்டுவதற்கென அவரது கம்பனியை அல்லது அவரது வங்கியாளரை அணுகுவதற்கும் அது தொடர்பில் வங்கி பொருத்தமானதெனக் கருதக்கூடிய எல்லாச் செய்கைகளையும்

நடவடிக்கைகளையும் விடயங்களையும் செய்வதற்கும் அட்டை உறுப்பினர் வங்கிக்கு இத்தால் அழிக்கமுடியாதவாறு அதிகாரமளிக்கின்றார். இந்த 36.2ஆம் பிரிவு இந்த உடன்படிக்கை முடிவுறுத்தப்பட்ட பின்னரும் நிலைத்திருக்கும்.

36.3 வங்கியின் ஏதேனும் செயலால் அல்லது நடத்தையால் அத்தகைய உரிமைகளைப் பிரயோகிப்பதிலான ஏதேனும் கவனயீனத்தால் அல்லது காலதாமதத்தால் வங்கியின் உரிமைகள் எவையும் விட்டுவிடப்பட்டுள்ளதாகக் கருதப்படமாட்டாது என்பதுடன் வங்கியால் எழுத்துமூலமாகத் திட்டவட்டமாக விட்டுவிடப்படும்வரை ஒவ்வொரு உரிமையும் முழு வலுவிலும் பயனுறுதியிலும் தொடர்ந்திருக்கும்.

36.4 அட்டை உறுப்பினர் ஒருவரின் எவையேனும் நிலுவையையும் வருமதியையும் அத்துடன் எல்லா நிலுவைகளையும் வருமதிகளையும் வங்கி தெரிவுசெய்யும் எவரேனும் மூன்றாம் திறத்தவருக்கு விற்பனை செய்வதற்கு, கைமாற்றுவதற்கு அல்லது சாட்டுதல் செய்வதற்கு வங்கி பூரண உரித்துடையதாவதுடன் முழுத் தத்துவமும் அதிகாரமும் கொண்டுள்ளது என்பதையும் அத்தகைய ஏதேனும் நடவடிக்கையைப் பற்றி வங்கியால் அட்டை உறுப்பினருக்கு விடுக்கப்படும் எழுத்திலான அறிவித்தல் வங்கிக்கான அத்தகைய கடப்பாடு தொடர்பில் அத்தகைய மூன்றாம் திறத்தவரான அட்டை உறுப்பினரை ஏற்றுக் கொள்ளுமாறு அத்தகைய நடவடிக்கை அட்டை உறுப்பினரைப் பிணிக்கின்றது என்பதனையும் அட்டை உறுப்பினர் வெளிப்படையாக அங்கீகரிப்பதுடன் ஏற்றும்கொள்கின்றார். இது தொடர்பிலான ஏதேனும் செலவு அட்டை உறுப்பினரின் கணக்கிற்கு அறவிடப்படும்.

36.5 அட்டை உறுப்பினரின் கணக்கில் வரவு மீதி எதுவுமிருப்பின் அது எத்தன்மையதுமான வட்டிக்கான கடப்பாட்டை வங்கியின்மீது

சுமத்தமாட்டாது என்ற நிகழ்வை அட்டை உறுப்பினர் கவனத்திற்கொள்ளுதல் வேண்டும்.

36.6 அட்டை உறுப்பாண்மையின் பயனைக்கொண்டு அட்டை உறுப்பினருக்குக் கிடைக்கக்கூடிய பற்றுறுதி நிகழ்ச்சித்திட்டங்கள் எவையுமிருப்பின் அவை அத்தகைய நிகழ்ச்சித்திட்டங்களுக்கு ஏற்புடைத்தாகக்கூடியவாறான அத்தகைய புறம்பான நியதி நிபந்தனைகளால் ஆளப்படும்.

36.7 சேவை நிறுவனங்கள் அவற்றின் வியாபாரப் பண்டங்கள் அல்லது சேவைகள் தொடர்பில் தள்ளுபடியொன்றை அல்லது கழிப்பனவை ஒழுங்குசெய்து நடத்தும்பொழுது அத்தகைய சேவை நிறுவனங்கள் அட்டையை ஏற்றங்கீகரிக்காதிருக்கலாம்.

36.8 இந்த உடன்படிக்கையை ஏதேனும் நேரத்தில் மாற்றுவதற்கான உரிமை வங்கிக்குண்டு. எவையேனும் மாற்றங்கள் பற்றி வங்கி அட்டை உறுப்பினருக்கு அறிவித்தல் வழங்கும். அறிவித்தல் கிடைக்கப்பெற்ற பின்னரும் அட்டை உறுப்பினர் அட்டையை தொடர்ந்து வைத்திருப்பாராயின் அல்லது

பயன்படுத்துவாராயின் அட்டை உறுப்பினர் மாற்றங்களை ஏற்றுக்கொண்டுள்ளதாக வங்கியால் கருதப்படும். அட்டை உறுப்பினர் மாற்றங்களை ஏற்றுக்கொள்ளாவிடில் அவர் காந்தக் கீற்றை வெட்டக்கூடிய அத்தகைய முறையில் ஒருகோணத்திலிருந்து மறுகோணம்வரை அரைவாசியாக வெட்டி தண்டுகளை வங்கிக்கு திருப்பிக்கொடுப்பதன்மூலம் இந்த உடன்படிக்கையை முடிவுறுத்தலாம். எல்லாக் கட்டணங்களுக்கும் அத்தகைய முடிவுறுத்துதலுக்கு முன்னரான எல்லா அறவீடுகளுக்கும் அட்டை உறுப்பினர் தொடர்ந்து பொறுப்பாதலும் பொறுப்புடையவராதலும் வேண்டும்.

37 **சட்டமும் நியாயாதிக்கமும்**

இந்த உடன்படிக்கை இலங்கைச் சட்டங்களால் ஆளப்படுவதுடன் அவற்றுக்கிணங்க பொருள்கொள்ளவும்படும். சட்டம், அரசாங்க ஒழுங்குவிதிகள் அல்லது இலங்கை மத்திய வங்கியால் அல்லது வேறு ஏதேனும் நியதிச்சட்ட

குழுமத்தால் வழங்கப்பட்ட அறிவுறுத்துதல்கள் எவையும் அத்தகைய திருத்தங்களை அவசியப்படுத்தினால் இந்த உடன்படிக்கை தானாகவே திருத்தப்பட்டதாயிருக்கும். அட்டையும் அட்டைக் கணக்கும் செல்லுபடியானவையும் சட்டபூர்வமானவையுமான நோக்கங்களுக்கு மாத்திரமே பயன்படுத்தப்படலாம். அட்டை உறுப்பினர் அட்டையை அல்லது அட்டைக் கணக்கை வேறு எவையேனும் நோக்கங்களுக்குப் பயன்படுத்தினால் அல்லது பயன்படுத்துவதற்கு வேறு எவரையும் அனுமதித்தால் அத்தகைய பாவனைக்கு அட்டை உறுப்பினரே பொறுப்பாதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய பாவனையின் விளைவாக உறப்பட்ட எல்லா நட்டங்களையும்/செலவுகளையும் வங்கிக்கு அல்லது அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் நிறுவனத்திற்கு செலவீடுசெய்யுமாறு அட்டை உறுப்பினர தேவைப்படுத்தப்படலாம்.

38. **சாட்டுதல் செய்யக்கூடிய தன்மையின் நியதிகள்**

இந்த உடன்படிக்கை முழுவதும் அல்லது அதன் ஏதேனும் பாகம் வங்கியால் ஏதேனும் அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் கம்பனிக்கு அல்லது அதன் இணைந்த கம்பனிகள் எவற்றிற்கும் அல்லது குறித்தொதுக்கப்பெற்றவற்றிற்கு (ஏதேனும் ''அமெரிக்கன் எக்கஸ்பிரஸ் அமைப்பு'') இப்போதும் வருங்காலத்தில் ஏதேனும் நேரத்திலும் சாட்டுதல் செய்யப்படுவதற்கு அட்டை உறுப்பினர் இத்தால் சம்மதமளிக்கின்றார் என்பதுடன் அத்தகைய ஏதேனும் சாட்டுதலானது வங்கியால் அல்லது ஏதேனும் ''அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் அமைப்பினால்'' அட்டை உறுப்பினருக்கு வழங்கப்படும் சாட்டுதல்பற்றிய ஏதேனும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட திகதியன்று பயனுறுதலும் வேண்டும்.